உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவக்ஷேத்திர சிவநாமக்கலிவெண்பா.

உமாபதி சிவாசாரியர் அருளியது.

பல்லவராயப்பட்டு

T. A. முத்துப்பிள்ளை அவர்கள் குமாரர்

M. சோமசுந்தரம்பிள்ளை

அரும்பத உரையுடன் வெளியிடப்பட்டது.

கும்பகோணம்

"யதார்த்தவசனீ அச்சுக்கூடத்தில்"

பதிப்பிக்கப்பட்டது.

[காப்பிரைட் ரிஜிஸ்டர்டு.] 1928. [விலை அணா 4.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவக்ஷேத்திர சிவநாமக்கலிவெண்பா.

உமாபதி சிவாசாரியர் அருளியது.

பல்லவராயப்பட்டு

T. A. முத்துப்பிள்ளை அவர்கள் குமாரர்

M. சோமசுந்தரம்பிள்ளை

அரும்பத உரையுடன் வெளியிடப்பட்டது.

கும்பகோணம்

"யதார்த்தவசனீ அச்சுக்கூடத்தில்"

பதிப்பிக்கப்பட்டது.

1928.

" வையந்தோறும் தெய்வந்தொழு "

[ஒளவையார்.]

சைவத்தின் மேற்சமயம் வேறில்லை யதிற்சார் சிவமாம்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனு நான்மறைச் செம்பொருள்வாய்
மெய்வைத்த சீர்த்திருத் தேவாரமும் திருவா சகமும்
உய்வைத் தாட்செய்த நால்வர்பொற் றுணம் உயிர்த்துணையே.

[சைவ எல்லப்ப நாவலர் இயற்றியது.]

உ

நர்த்தனகணபதிதுணை.

# முன்னுரை.

"கமலையில் பிறக்க முத்தி காசியில் இறக்க முத்தி
நிமலனார் அருணை தன்னை நினைக்கவே முத்தி யுண்டாம்."

என்ற ஆன்றோர் கொள்கையின்படி, "சிவ க்ஷேத்திரச் சிவநாமக் கலிவெண்பா" என்னும் நூலை ஓத, முத்தி தரும் என்பது திண்ணம். அக் காரணம் பற்றியே சந்தான சிவாசாரியருள் ஒருவராகிய உமாபதி சிவாசாரியர் நம்போன்றவர்கள் நாடோறும் ஓதியுணர்ந்து, திரிகரணசுத்தி அடைந்து, ஸ்ரீ தியாகராஜன் திவ்ய சரணாரவிந்தங்களுக்குப் பாத்திரர் ஆகும்படி, எளிய இனிய தமிழில் செய்யுளாகச் சுருக்கி எழுதிக் கொடுத்திருக்கின்றார். இந்நூலைக் கற்றவர்களும், மற்றவர்களும், தனவந்தரும், ஏனையோரும் ஓதி உணரவும், பிரதி தினமும் க்ஷேத்திர நாமங்களையும் பார்வதி பரமேச்சுவரர்களின் திருநாமங்களையும் உச்சரிக்க அநுகூலமாயிருக்கும்படி பதிப்பிக்க வேண்டுமென்று என் நண்பர்கள் என்னை வேண்டிக்கொண்டதற்கிணங்க, இந்நூலுக்கு ஓர் புதிய பதிப்பை அரும்பொருள் விளக்கத்துடனும், இலக்கண விதியின்படி அமைந்துள்ள கடினமான சந்திகளையும் பிரித்து எழுதி வெளியிட்டனன்.

இச்சிவநாமக் கலிவெண்பா சைவ சமய குரவர்களாகிய சம்பந்தர் அப்பர் சுந்தரர் ஆகிய மூவரும் பாடிய தேவாரத்திலும், மாணிக்கவாசகர் பாடிய திருவாசகத்திலும் புனைந்து கூறப்பட்ட திவ்ய சிவ க்ஷேத்திர திருநாமங்களையும், அந்தந்த க்ஷேத்திரத்தில் கோவில் கொண்டருளும் எம்பெருமான் பிராட்டியார் திருநாமங்களையும் இனிது கூறுவது.

இத்தகைய நூலுக்குக் கலிவெண்பா எனப் பெயர் கொடுத்தது என்னை. கலி என்பதற்கு அம்பு என்பது பொருள். அதாவது நமது பிறவியாகிய பகையைக் கொல்லக்கூடிய அம்பு என்பதும் சிவநாமக் கலிவெண்பாவை ஓதுவாரது பிறவிநோய் நீங்குமென்பதும் பொருள். அன்றிச் சிவத்தின் திருநாமங்களை ஒலிக்கும் வெண்பா

என்றும், கலியுகத்தில் மாந்தர் அடையக்கூடிய முத்திநெறியைக் காட்டக்கூடியதோர் வெண்பா எனவும் பொருள் கொள்வது இழுக்கன்று.

ஆகையின் உமாபதி சிவாசாரியார் நமக்குக் கொடுத்த இந்த நிதியை நாம் பிரதிதினமும் காலையிலும் மாலையிலும் திரிகரணசுத்தியோடு மனனம் செய்தால் நாம் அக்ஞானத்தோடு செய்த சர்வ பாபங்களினின்றும் விடுபட்டு, எம்பெருமான் திருவடி நீழலுக்குப் பாத்திரர் ஆவோம் என்பது உண்மை. இதுவே நான்கு வகைப் புருஷார்த்தங்களையும் அளிக்கவல்லது.

தவிர, மேனாட்டார் தங்கள் மதத்தைப் பரவச்செய்யப் (Bible) பைபிளில் உள்ள கதைகளை எளிதில் யாவரும் அறியும்படி சுலபமான நடையில் எழுதிச் சிறு சிறு புத்தகங்களாக அச்சிட்டு வெளியிடுவதுபோல், நாமும் நம்முடைய மத விஷயங்களைச் சிறு சிறு புத்தகங்களாக எழுதி அச்சிட்டு வெளியிட்டால் நம்மவர்களும் எளிதில் அறிந்துகொள்வதோடு நூற்பெயரும் மறைந்து போகாது என்பது என் துணிபு. தமிழ் மக்கள் தமது மொழி சமயம் ஆகிய இரண்டையும், இரண்டு கண்ணெனப் போற்றி எவ்வகைச் சிறப்பையும் அடையவேண்டும். *ஆனதுபற்றியே இந்நூலைச் சிறு புத்தகமாயும், சுலபமாய்க் கையாடக்கூடியதாயும், குறைந்த விலைக்கு அடங்குவதாயும் அச்சிட்டு வெளியிட்டேன். இப்பதிப்பின்கண் குற்றம் குறைகள் இருப்பினும் கற்றவர் அவற்றைப் பொருட்படுத்தாது காப்பர் என்றே இக்காரியத்தில் பிரவேசித்தேன்.

* "கலைப்பொருட்டால் வாங்கா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் நூல் பதிப்பாரில்."

28—1—28.
பிரபவஹ
தைமீ 15உ

M. SOMASUNDARAM PILLAI,
*Pallavarayapet,*
**Mayavaram Taluk.**

## நூலாசிரியர் வரலாறு.

இந்நூலாசிரியர் உமாபதிசிவாசாரியர். இவர் சந்தானகுரவர் எனப்படும், மெய்கண்டதேவர், அருணந்திசிவாசாரியர், மறைஞான சம்பந்தர், உமாபதிசிவாசாரியர், என்பவரில் ஒருவர். இவர் சோழ நாட்டில் சிதம்பரத்தில் சைவவேதியர் எனப்படும் தில்லைமூவாயிரவருள் ஒருவர். இவருக்கு மூவாயிரம் நாட்களுக்கு ஒருமுறை நடராஜப்பெருமானைப் பூசிக்கும் தினம் வரும். அவ்வாறு தனக்கு வந்த முறைத்தினத்தன்று பூஜை புரிந்து, முறைகாரர் வழக்கப்படி சிவிகையூர்ந்து தன் இல்லம் செல்லும்போது, அங்கு மதுகரவிர்த்தி செய்துகொண்டிருந்த மறைஞானசம்பந்தரை நோக்காது செல்ல, அதைக்கண்ட மறைஞானசம்பந்தர் "பட்டகட்டைமேல் போகிறது பகற்குருடு" என்று சொன்னதைக் கேட்டு, ஞானோதயம் அடைந்து, சிவிகையினின்றும் இறங்கி அவரை வணங்கி நின்றார். ஒருநாள் இவருடைய பரிபக்குவத்தை அறிய மறைஞானசம்பந்தர் நெய்வார் தெருவில் சென்று, அவர்கள் பாகிற்கு இடும் கஞ்சியினைக் கையேற்று உண்டார். உமாபதியாரும் அக்கையினின்றும் ஒழுகிய கூழை உண்டு உடன் இருந்தார். உமாபதியாரது பரிபக்குவநிலையை உணர்ந்து மறைஞானசம்பந்தர் அவருக்குச் சிவஞானபோதத்தை உபதேசித்தனர். இவ்வாறிருக்கையில் தில்லைமூவாயிரவர் இவரை ஆசாரப் பிரஷ்டர் என்று விலக்கி வைத்தார்கள். அவர்கள் அப்படிச் செய்ததினால் இவர் கொற்றவன்குடியில் ஓர் மடங் கட்டிக்கொண்டு அதில் சிலகாலம் வசித்து நிஷ்டை புரிந்து வந்தார். இவ்வாறிருக்கையில், தனக்கு நடராஜா பூஜைமுறை வர அன்று திருத்தில்லைக் கோயில் செல்ல, மூவாயிரவர் தடுத்தனர். மீண்டும் தம் மடம் அடைந்து நடராஜனை மனத்தால் பூஜித்தனர். தில்லைமூவாயிரவர் கோவிலுக்குச் சென்று கதவைத் திறந்து பூஜை செய்யப் பெட்டகத்தைப் பார்க்கக் கடவுளைக் காணாதவராய்த் திகைத்து வருந்துகையில் "நாம் உமாபதிபால் இருக்கின்றனம்" என்னும் அசரீரி வார்த்தையைக் கேட்டு யாவரும் உமாபதிபால் சென்று வணங்கிப் பிழைபொறுக்குமாறு பிரார்த்தித்து அவரை அழைத்து வந்து பூஜை புரியுமாறு செய்தனர். உமாபதியார் கொற்றவன்குடியில் இவ்வாறு தங்கியிருக்கும் நாட்களில் பூர்வம் செய்த பாபவசத்தால் பிராமணன் ஒருவன் புலையனாய்ப் பிறந்து பெற்றான் என்னும் பெயரோடு வளர்ந்து புலைச்சியை மணந்து, பிறப்பால் அருவருப்படை

ந்து, பூர்வ புண்ய வசத்தால் தன் சுற்றத்தாரையும் ஊரையும் விட்டு நீங்கி, சிதம்பரத்தை அடைந்து, கட்டைவெட்டித் திருச்சிற்றம்பல முடையார் திருமடைப்பள்ளிக்கு வேதியர் வழியாகக் கொடுத்து வந்தார். இப்படி இருக்குநாளில், பக்குவகாலம் நெருங்கியதும், சிவபெருமான் கனவில்தோன்றி, உமாபதி சிவாசாரியாருக்குக் கொடுக்கும்படி திருமுகப்பாசுரம் "அடியார்க் கெளியன் சிற்றம் பலவன் கொற்றங், குடியார்க் கெழுதிய கைச்சீட்டு—படியின் மிசைப், பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து, முத்தி கொடுக்க முறை." என்று எழுதிக்கொடுத்த பாசுரம் இருக்கக் கண்டு, அதனைச் சிரமேற் கொண்டு பத்திரப்படுத்திவைத்து அது முதல் கொற்றவன்குடியில் உள்ள உமாபதிசிவாசாரியர் மடைப்பள்ளிக்கு விறகு வெட்டிக்கொண்டுபோய்க் கொடுத்து வந்தான். இவ்விதம் இத்திருப்பணி செய்துவந்த நாளில் மழை மிகுதியால் பெற்றான்சாம்பான் வரத் தாமதித்தது. அதனால் போஜனத்திற்கும் தாமதித்தது. உமாபதியார் காரணம் கேட்க, அந்தணர்கள் மடைப்பள்ளிக்கு விறகு கொண்டுவந்து கொடுப்பவர் இன்று வாராமையால் தாமதித்தது என்று சொன்னார்கள். நாளை அவர் வரின் தன்னிடம் தெரிவிக்கும்படி சொன்னார். அவ்வாறே பெற்றான் சாம்பான் மறுநாள் இரண்டுநாள் விறகும் சேர்த்துக் கொண்டு வரக்கண்டு உமாபதியாரிடம் கூற, உமாபதியார் பெற்றானை அழைத்து நீ யார் என, பெற்றான் சிவபெருமான் கொடுத்த திருமுகத்தை வைத்து நமஸ்கரித்தார். அத்திருமுகத்தை வேதியர் உமாபதியாருக்குத் தர அவர் அதை வாசித்துப்பார்த்து சிவபெருமான் கட்டளை எனத் தெரிந்து சிரசில் வைத்து நேத்திரத்தில் ஒற்றிக்கொண்டு, பெற்றான்சாம்பானுக்கு சத்தியோ நிர்வாணதீக்ஷையால் முத்தியளித்தனர். இப்படி முத்தியடைந்ததைப் பார்த்து அவரது உறவினரும் மற்றவரும் அரசனிடம் சென்று பெற்றான்சாம்பானை உமாபதியார் எரித்துவிட்டார் என்று முறையிட்டனர். அரசன் உமாபதியாரை விசாரிக்க முத்தி கொடுத்ததாகச் சொன்னார். அரசன் தன் கண்ணுக்கெதிரே முத்திதர வேண்டும் என்று சொல்ல உமாபதியார் நன்றாய் முற்றிய முள்ளிச் செடிக்குத் தீக்ஷைபுரிந்து முத்தி கொடுக்கக் கண்ணுற்று யாவரும் அவர் அடிபணிந்து சென்றார்கள். ஒரு சமயம் சிதம்பரத்தில் உச்சவத்திற்குக் கொடிஏறத் தடைப்பட்டிருக்கக் கொடிக்கவி பாடி கொடியேறும்படி செய்தார்.

இவர் செய்த நூல்கள் :—பௌஷ்கர வியாக்கியானம், கோயிற் புராணம், திருத்தொண்டர் புராணசாரம், திருமுறைகண்டபுராணம், சேக்கிழார்நாயனார்புராணம், திருப்பதிகக்கோவை, சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, சிவக்ஷேத்திர சிவநாமக் கலிவெண்பா, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம், சிவபுண்ணியத்தெளிவு முதலியவைகள்.

இவருக்கு ஆசிரியர் மறைஞானசம்பந்தர்; இவர் சற்றேறக்குறைய 600 வருஷங்களுக்குமுன் இருந்தவர் என்னலாம். இவரைப் பெரிய புராணத்து அடியார்களுள் ஒருவராகக்கொண்டு குருபூஜை மடங்களில் இவர் பதவியடைந்த திருநக்ஷத்திரத்தில் மகேச்வர பூஜையும் ஆராதனையும் நடந்துவருகிறது. இவர் சித்திரை மாதம் அஸ்த நக்ஷத்திரங்கூடிய சுபதினத்தில் சாயுஜ்யபதவியடைந்தனர்.

உ
கணபதிதுணை.

சந்தானசாரியருள் ஒருவராகிய
உமாபதிசிவாசாரிய சுவாமிகள்
அருளிச்செய்த

# சிவக்ஷேத்திர சிவநாமக் கலி வெண்பா.

காப்பு.

நன்மை மிகுந்தசிவ நாமக் கலிவெண்பாச்
சொல்மொழியி னாலே துதிப்பதற்குப்—பன்மைத்
திருப்பதிகள் தோறும் திகழ்களிற்றின் தாளை
விருப்பதிக மாகநெஞ்சே வேண்டு.

## காவேரிக்கு வடகரையில் உள்ள தலம்—63.

1 பொன்னி வடகரையில் பொன்னம்பலக் கோவில்
மன்னு சிவகாமி மகிழ்ந்தேத்த—நன்னடனம்

2 ஆடும் சபாபதியே அம்மைஉமை கண்குளிர
நாடும் திருமூல நாயகா—நீடுதிரு

3 வேட்களம் மாநகரில் மேவுநல்ல நாயகிக்கு
வாழ்க்கைபுரி பாசுபத மன்னவா—ஆக்கம்மிகு

4 நெல்வாயில் மேவி நிலவுகன காம்பிகையைப்
புல்குமுச்சி நாதப் புராதனா—மல்குகழிப்

5 பாலைநகர் வாழ்பொன் பதவேத நாயகியை
மாலையிடும் பால்வண்ண நாதனே—சீலமிகும்

6 நல்லூர்ப் பெருமணம்சேர் நங்கைஉமை யாள்மருவும்
செல்வச் சிவலோகத் தியாகேசா—முல்லைநகை

7 வாயவடி வாளொடும கேந்திரப் பள்ளியிடத்து
ஆயதிரு மேனி அழகனே—தூய

8 அணிகொண்ட கோதையுடன் ஆர்ந்தமுல்லை வாயில்
நணுகிய முல்லைவன நாதா—புணர்கலிக்கா

9 மூர்சார் அழகு வனமுலையோடு ஒன்றுசுந்த
ரேசர் அமரர்க்கு இறைவனே—சீர்சார்



## காவேரிக்கு வடகரையில் உள்ள தலம்—63.

| | | |
|---|---|---|
| 1 | (கோயில்—சிதம்பரம்)<br>பொன்னம்பலம் (கனகசபை) | சுவாமி—சபாநாயகர்<br>அம்மன்—சிவகாமி அம்மை |
| 2 | மூலத்தானம் | சுவாமி—திருமூலநாதர்<br>அம்மை—உமையம்மை |
| 3 | திருவேட்களம்<br>(மூங்கில்வனம்) | சுவாமி—பாசுபதேசுரர்<br>அம்மை—நல்லநாயகியம்மை |
| 4 | திருநெல்வாயில்<br>(சிவபுரி) | சுவாமி—உச்சிநாதர்<br>அம்மை—கனகாம்பிகை |
| 5 | திருக்கழிப்பாலை<br>(காரைமேடு) | சுவாமி—பால்வண்ணநாதர்<br>அம்மை—வேதநாயகி |
| 6 | திருநல்லூர்ப்பெருமணம்<br>(ஆச்சாபுரம்) | சுவாமி—சிவலோகதியாகேசர்<br>அம்மை—உமையம்மை |
| 7 | திருமகேந்திரப்பள்ளி<br>(கோயிலடிப்பாளையம்) | சுவாமி—திருமேனியழகர்<br>அம்மை—வடிவாளம்மை |
| 8 | தென்திருமுல்லைவாயில் | சுவாமி—முல்லைவனநாதர்<br>அம்மை—கோதையம்மை |
| 9 | கலிக்காமூர்<br>(அன்னப்பன்பேட்டை) | சுவாமி—சுந்தரேசர்<br>அம்மை—வனமுலையம்மை |

10 குயிலினும் நன்மொழியைக் கூடிச்சாய்க் காட்டில்
இயல்பொடுவாழ் சாயாவ னேசா—இயல்மேவும்
11 பல்லவ னீச்சுரத்தின் பால்சவுந்த ராம்பிகையைப்
புல்லிய பல்லவனப் பூரணா—நல்லதிரு
12 வெண்காட்டில் வாழ்பிரம வித்தியா நாயகியாள்
தண்கார் சுவேதா ரணியனே—விண்காரும்
13 பாய்ந்தபுகழ்க் கீழ்க்காட்டுப் பள்ளியகி லாண்டவம்மை
தோய்ந்துமகிழ் ஆரணிய சுந்தரா—வாய்ந்தஎழில்
14 காவியங் கண்ணிகுரு காவூரில் அன்புடனே
மேவும் திருமேனி வெள்ளடையே—தேவர்தொழும்
15 சீர்காழி மேவும் திருநிலை நாயகிசேர்
ஏகா பிரமபுரி ஈசனே—வாகுதிருக்
16 கோலக்கா ஓசை கொடுத்தவளைச் சேர்ந்துமகிழ்
சாலச்செய் சத்தபுரித் தாணுவே—ஞாலமகிழ்
17 புள்ளிருக்கு வேளூர் புரந்தருளும் தையல்மனத்து
உள்ளிருக்கு மாவயித்ய உத்தமா—தெள்ளுகண்ணார்
18 கோயில் முருகுவளர் கோதையுடன் அன்பர்நெஞ்சில்
ஏயுமருள் கண்ணா யிரத்தானே—நேயமுடன்
19 அன்பாங் கடைமுடியை ஆளுமபி ராமிபுணர்
இன்பாங் கடைமுடிநல் லீச்சுரா—நண்புடனே
20 நின்றியூர் வாழுலக நாயகிநன் னேசமுறும்
இன்றுணைம காலக்மி யீசனே—நன்றாகும்
21 தோகைசொக்க நாயகியைத் தோய்ந்துதிருப் புன்கூரில்
சேகரமாய் வாழும் சிவலோகா—மோகமற
22 வீடுதிரு நீடூரில் வேயுறு தோளியையே
நாடும்அருள் சோம நாதனே—நீடுவன்னி
23 யூர்ப்பெரிய நாயகிதன் உள்ளத் திடையிருக்கும்
தாப்புடைய ஆபத் சகாயனே—பார்ப்பிணியைக்
24 காயும் பரிமளசு கந்தையைவேள் விக்குடியில்
தோயும் கலியாண சுந்தரா—ஆயுமலர்
25 வாச மலர்க்குழல்நல் மாதொடெதிர் கொள்பாடிக்கு
ஆசைகொண்டு வாழுமயி ராவதனே—பேசுபுகழ்

| | | |
|---|---|---|
| 10 | திருச்சாய்க்காடு (சாயாவனம்) | சுவாமி—சாயாவனேசர் அம்மை—குயிலினும்நன்மொழியம்மை |
| 11 | பல்லவனீச்சுரம் (காவிரிப்பூம்பட்டினம்) | சுவாமி—பல்லவனநாதர் அம்மை—சௌந்தராம்பிகை |
| 12 | திருவெண்காடு | சுவாமி—சுவேதாரண்யேசுரர் அம்மை—பிரம்மவித்யாநாயகி |
| 13 | கீழ்க்காட்டுப்பள்ளி (கீழைத்திருக்காட்டுப்பள்ளி) | சுவாமி—ஆரணியசுந்தரர் அம்மை—அகிலாண்டவம்மை |
| 14 | திருக்குருகாவூர்வெள்ளடை | சுவாமி—திருமேனிவெள்ளடைநாதர் அம்மை—காவியங்கண்ணியம்மை |
| 15 | சீர்காழி | சுவாமி-பிரமபுரீசர்-தோணியப்பர் அம்மை—திருநிலைநாயகி |
| 16 | திருக்கோலக்கா (திருத்தாளமுடையார்கோவில்) | சுவாமி—சப்தபுரிநாதர் அம்மை—ஓசைகொடுத்தநாயகி |
| 17 | திருப்புள்ளிருக்குவேளூர் (வைத்தீச்சுவரன்கோவில்) | சுவாமி—வைத்யநாதர் அம்மை—தையல்நாயகி |
| 18 | திருக்கண்ணார்கோவில் (குறுமாணக்குடி) | சுவாமி—கண்ணாயிரநாதர் அம்மை—முருகுவளர்கோதை |
| 16 | திருக்கடைமுடி (கீழூர்) | சுவாமி—கடைமுடிநாதர் அம்மை—அபிராமியம்மை |
| 20 | திருநின்றியூர் | சுவாமி—மகாலக்ஷுமிநாதர் அம்மை—உலகநாயகி |
| 21 | திருப்புன்கூர் | சுவாமி—சிவலோகநாதர் அம்மை—சொக்கநாயகியம்மை |
| 22 | திருநீடூர் | சுவாமி—சோமநாதர் அம்மை—வேயுறுதோளியம்மை |
| 23 | வன்னியூர் (பொன்னூர்) | சுவாமி—ஆபத்சகாயர் அம்மை—பெரியநாயகியம்மை |
| 24 | திருவேள்விக்குடி | சுவாமி—கலியாணசுந்தரர் அம்மை—பரிமளசுகந்தநாயகி |
| 25 | திருவெதிர்கொள்பாடி (மேலைத்திருமணஞ்சேரி) | சுவாமி—அயிராவதநாதர் அம்மை—மலர்க்குழல்நாயகி |

26 கூடுமணஞ் சேரியில்வாழ் கோலயாழ் மென்மொழியை
நாடும் அருள்வள்ளல் நாயகா—நீடுசுகம்
27 ஆயும் குறுக்கையின்ஞா னம்பிகையோடு ஆர்க்குமருள்
ஈயும் புகழ்வீரட் டேசனே—நேயமுடன்
28 கூற்றடும்கண் கோல்வளையாள் கூடக் கருப்பறியல்
போற்றிவளர் குற்றம் பொறுத்தவர்—தோற்றுமருள்
29 தாய்குரக்குக் காக்குந் தளநா யகியிடத்தே
எய்குந் தளக்கருணை ஈசனே—தூயபுகழ்
30 வாளொளிபுற் றாரிலுறும் வண்டமர் பூங்குழற்கு
வாழ்வுதரு மாணிக்க வண்ணனே—நீளும்
31 வடிக்கண் அமுதகர வல்லியொடு மண்ணிப்
படிக்கரைவாழ் நீலகண்டப் பண்பா—அடுக்கும்ஓம்
32 ஆம்புலியூர்ப் பூங்கொடியோ டன்புடனே யாவருக்கும்
தேம்புதுய ரந்தீர்த்த செல்வமே—வான்பணியும்
33 கானார் குழலியொடும் கானாட்டு முள்ளூர்வாழ்
பால்நீ றணிந்த பதஞ்சலியே—வானோர்
34 திரிபுர சுந்தரிமுன் சேர்நாரை யூரில்
வருசவுந்த ரேச மலையே—பெருகுமெழில்
35 ஆர்ந்தவித்துச் சோதிமின்னோடு ஆனகடம் பூரிலென்றும்
சேர்ந்த அமுதகடச் செல்வமே—சார்ந்தளிசூழ்
36 கந்த மலர்க்குழலாள் காம்பன்ன தோளிபுணர்
பந்தண நல்லூர்ப் பசுபதியே—சுந்தரம்சேர்
37 கஞ்சனூர் மேவுகின்ற கற்பக நாயகியோடு
இன்சொன்மறை பேசுமக்கி னீச்சுரா—மஞ்சின்
38 கணமார் திருக்கோடிக் காவில்வடி வாட்குத்
துணையாய்வாழ் கோடீச் சுரனே—அணிகொள்
39 திருமங்கலக் குடிவாழ் செல்வமங்க ளாம்பை
மருவுபுரா ணேச வரதா—தரணியுளோர்
40 நம்பு மருட்பெரிய நாயகியோ டும்பனந்தாட்கு
அன்பு மிகுந்தசடை யப்பனே—இன்பணிகள்
41 நாற்றுதிரு ஆப்பாடி நன்பெரிய நாயகியோடு
ஊற்றுபசுப் பாலுகந்த உத்தமா—ஆற்றல்

| | | |
|---|---|---|
| 26 | திருப்பணஞ்சேரி | சுவாமி—அருள்வள்ளல்நாயகர்<br>அம்மை—யாழ்மென்மொழியம்மை |
| 27 | திருக்குறுக்கை | சுவாமி—வீரட்டேச்சுவரர்<br>அம்மை—ஞானம்பிகை |
| 28 | திருகருப்பறியலூர்<br>(தலைஞாயர்-மேலைக்காழி) | சுவாமி—குற்றம்பொறுத்தநாதர்<br>அம்மை—கோல்வளைநாயகி |
| 29 | திருகுரக்குக்கா | சுவாமி—குந்தளநாதர்<br>அம்மை—குந்தளநாயகி |
| 30 | திருவாழ்கொளிபுத்தூர்<br>(வாளொளிபுற்றூர்) | சுவாமி—மாணிக்கவண்ணர்<br>அம்மை—வண்டமர்பூங்குழலி |
| 31 | திருமண்ணிப்படிக்கரை<br>(இலுப்பப்பட்டு) | சுவாமி—நீலகண்டர்<br>அம்மை—அமுதகரவல்லியார் |
| 32 | திருஓமாம்புலியூர் | சுவாமி—துயரந்தீர்த்தநாதர்<br>அம்மை—பூங்கொடிநாயகி |
| 33 | திருக்கானாட்டுமுள்ளூர் | சுவாமி—பதஞ்சலிநாதர்<br>அம்மை—கானார்குழலியம்மை |
| 34 | திருநாரையூர் | சுவாமி—சௌந்தரேசர்<br>அம்மை—திரிபுரசுந்தரியம்மை |
| 35 | திருக்கடம்பூர்<br>(மேலைக்கடம்பூர்) | சுவாமி—அமிர்தகடேசர்<br>அம்மை—சோதிமின்னம்மை |
| 36 | திருப்பந்தனைநல்லூர் | சுவாமி—பசுபதிநாதர்<br>அம்மை—காம்பன்னதோளியம்மை |
| 37 | திருக்கஞ்சனூர் | சுவாமி—அக்னீச்சுரர்<br>அம்மை—கற்பகநாயகி |
| 38 | திருக்கோடிக்கா<br>(திருக்கோடிக்காவல்) | சுவாமி—கோடீச்சுரம்<br>அம்மை—வடிவம்மை |
| 39 | திருமங்கலக்குடி | சுவாமி—புராணேச்சுரர்<br>அம்மை—மங்களநாயகி |
| 40 | திருப்பனந்தாள் | சுவாமி—சடையப்பர்<br>அம்மை—பெரியநாயகியம்மை |
| 41 | திருஆப்பாடி | சுவாமி—பாலுகந்தநாதர்<br>அம்மை—பெரியநாயகியம்மை |

42 தருசேய்ஞ லூர்வாழ் சகிதேவி சத்த
கிரியீசா என்றுதொழும் கேள்வா—வருமருந்து

43 நாயகிதே வன்குடியில் நண்புடனோர் பங்கிலென்றும்
ஏயவருள் கற்கடக ஈச்சுரனே—தூயவிரைச்

44 செஞ்சாந் தணிசவுந்த ரந்தோய் வியலூர்வாழ்.
நஞ்சார் களயோகா னந்தனே—இன்சொலுடன்

45 பந்தாடு நாயகியோர் பங்குறையும் கொட்டையூர்ச்
சுந்தரா கோடீச் சுரமணியே—கொந்தார்பூம்

46 கொம்பனையோடு இன்னம்பர் கோயில்கொண்டு வாழ்தலு
அன்பாம் எழுத்தறிந்த அப்பனே—நம்புறம்ப [றும்

47 யத்தில் கரும்படுசொல் அன்னத்தை ஓர்பாலில்
வைத்திருக்கும் சாட்சி வரதனே—நச்சு

48 விசயமங்கை யூர்மங்கை நாயகிமீ தென்றும்
நசைமே வியவிசய நாதா—விசையுடனே

49 புல்லும் வளைக்கைவல்லிப் பூவையுடன் வைகாவாழ்
வில்ல வனேச விமலனே—சொல்லுகுராங்கு

50 ஆடுதுறை மேவும் அழகு சடைமுடியாள்
நாடுங் குலைவணங்கு நாயகா—நீடுதிரு

51 நங்கை திருப்பழனம் நற்பெரிய நாயகிபால்
தங்கிய ஆபத் சகாயனே—பொங்குமறை

52 ஐயாற்றின் மேவும் அறம்வளர்த்தா ளோடுவளர்
துய்யபுகழ் மேவுசெம்பொற் சோதியே—மையிருங்கண்

53 பாவைவா லாம்பிகைதன் பாகாநெய்த் தானத்தில்
ஆவலுறு நெய்யாடி யப்பனே—சீர்வளர்நூல்

54 ஆயும் பெரும்புலியூர் அம்மை சவுந்தரியோடு
ஏயும் வியாக்கிரபுரி ஈசனே—தூய

55 மழபாடி மேவி மகிழுமழ கம்மை
தழுவி மகிழ்வயிரத் தம்பா—பழுவூரில்

56 அம்மை இமைய அருந்தவ நாயகிசேர்
நன்மை வட்மூல நாயகா—புன்மையிலாச்

57 சன்மார்க்கர் வாழ்காளூர்த் தையல்சிவ யோகமின்னாள்
நன்மோகச் செம்மேனி நாதனே—பொன்மேவும்

| | | |
|---|---|---|
| 42 | திருச்சேய்ஞலூர் | சுவாமி—சத்தகிரீச்சுரர் |
| | | அம்மை—சசிதேவியம்மை |
| 43 | திருத்தேவன்குடி | சுவாமி—கற்கடகேச்சுரர் |
| | | அம்மை—அருமருந்தம்மை |
| 44 | திருவியலூர் | சுவாமி—யோகானந்தர் |
| | (பண்டாரவாடைத்திருவியலூர்) | அம்மை—சௌந்தரநாயகியம்மை |
| 45 | திருக்கொட்டையூர் | சுவாமி—கோடீச்சுரர் |
| | | அம்மை—பந்தாடுநாயகியம்மை |
| 46 | திருஇன்னம்பர் | சுவாமி—எழுத்தறிந்தநாயகர் |
| | | அம்மை—பூங்கொம்பனைநாயகி |
| 47 | திருப்புறம்பயம் | சுவாமி—சாக்ஷிநாதர் |
| | | அம்மை—கரும்படுசொல்லன்னம் |
| 48 | திருவிசயமங்கை | சுவாமி—விஜயநாதர் |
| | | அம்மை—மங்கைநாயகி |
| 49 | திருவைகாவூர் | சுவாமி—வில்லவனேசர் |
| | (வில்வவனம்) | அம்மை—வளைக்கைநாயகி |
| 50 | திருக்குரங்காடுதுறை (வட) | சுவாமி—குலைவணங்குநாதர் |
| | | அம்மை—அழகுசடைமுடியாள் |
| 51 | திருப்பழனம் | சுவாமி—ஆபத்சகாயர் |
| | | அம்மை—பெரியநாயகியம்மை |
| 52 | திருவையாறு | சுவாமி—செம்பொற்சோதிநாதர் |
| | | அம்மை—அறம்வளர்த்தநாயகி |
| 53 | திருநெய்த்தானம் | சுவாமி—நெய்யாடியப்பன் |
| | (தில்லைத்தானம்) | அம்மை—பாலாம்பிகை |
| 54 | திருப்பெரும்புலியூர் | சுவாமி—வியாக்கிரபுரீச்சுரர் |
| | | அம்மை—சௌந்தரநாயகி |
| 55 | திருமழபாடி | சுவாமி—வச்சிரதம்பநாதர் |
| | | அம்மை—அழகம்மை |
| 56 | திருப்பழுவூர் | சுவாமி—வடமூலநாதர் |
| | (கீழப்பழூர்) | அம்மை—அருந்தவநாயகி |
| 57 | திருக்கானூர் | சுவாமி—செம்மேனிநாதர் |
| | | அம்மை—சிவயோகநாயகி |

58 அன்பிலா லந்துறைவா ழும்மை சவுந்தரிதோள்
இன்பமுறு சத்தியவா கீசனே—நம்புதிரு
59 மாந்துறை மேவுகின்ற மங்கையழ கா லுயர்ந்தாட்கு
ஏந்துபுக ழாம்பிரவ னேச்சுரா—பூந்தருவார்
60 பாற்றுறை மேவும் பரைமோக நாயகியார்
தோற்றுதிரு மூல சுவாமியே—போற்றுதிரு
61 ஆனைக்கா மேவும் அகிலாண்ட நாயகிசேர்
ஞானப் புகழ்ச்சம்பு நாயகா—வானமிகு
62 பைஞ்ஞீலி மேவியருள் பாவைவிசா லாட்சிபுணர்
மெய்ஞ்ஞான நீலகண்ட வேதியா—இஞ்ஞாலம்
63 போற்றுபாச்சி லாச்ரமப் பொன்வால சுந்தரிசேர்
மாற்றறிவா னான வரதனே—தோற்றுதிரு
64 வீங்கோய் மலைமேவும் இன்ப மரகதமான்
தாங்குமின்ப மேமரக தாசலா—ஈங்கறுபான்

காவேரியின் தென்கரையிலுள்ள தலம்—**127.**

65 மூன்றுபதி அப்பால்நீர் மொய்த்துவரு தென்கரையில்
தோன்றிவளர் வாட்போக்கித் தொன்னகரில்—தேன்தகுசொல்
66 பெற்றசுரும் பார்குழலி பேரன்பி னால்புணர்ந்து
நத்துகின்ற ரத்னகிரி நாயகா—உற்றழகு
67 தோன்றுங் கடம்பந் துறைமுற்றி லாமுலையை
ஏன்ற கடம்பவ னேசனே—தோன்றும்
68 பராய்த்துறை மேவும் பசும்பொன் மயில்சேர்
பராய்த்துறை நாதா பரமா—குராப்புடைசூழ்
69 கற்குடி மேவுகின்ற கன்னியஞ்ச னாட்சிமகிழ்
நற்குண உச்சிவ நாயகா—சொல்குலவு
70 மூக்கீச் சரநகர்வாழ் மோகமிகு காந்திமதி
வாக்காற் புகழ்பஞ்ச வர்ணனே—மீக்குயர்ந்த
71 தென்சிராப் பள்ளியில்வாழ் செல்லமட்டு வார்குழலி
இன்பாநன் மாதுருபூ தேச்சுரனே—அன்பார்
72 நறுங்குழலி நாயகியை நல்லெறும்பி யூரில்
பெறுமெறும் பீசப் பிரானே—உறுஞ்சீர்

| | | |
|---|---|---|
| 58 | திருஅன்பிலாலந்துறை | சுவாமி—சத்தியவாகீசர்<br>அம்மை—சௌந்தரநாயகி |
| 59 | திருமாந்துறை | சுவாமி—ஆம்பிரவனநாதர்<br>அம்மை—அழகம்மையார் |
| 60 | திருப்பாற்றுறை | சுவாமி—திருமூலநாதர்<br>அம்மை—மோகநாயகியம்மை |
| 61 | திருஆனைக்கா<br>(ஜம்புகேச்சுவரர்) | சுவாமி—ஜம்புகேச்வரர்<br>அம்மை—அகிலாண்டநாயகி |
| 62 | திருப்பைஞ்ஞீலி | சுவாமி—நீலகண்டேச்சுவரர்<br>அம்மை—விசாலாக்ஷியம்மை |
| 63 | திருப்பாச்சிலாச்சிராமம்<br>(திருவாசி) | சுவாமி—மாற்றறிவரதர்<br>அம்மை— பாலசுந்தரியம்மை |
| 64 | திருவீங்கோய்மலை<br>(திருவிங்கநாதமலை) | சுவாமி—மரகதாசலர்<br>அம்மை—மரகதாம்பிகை |

காவேரியின் தென்கரையிலுள்ள தலம்—**127.**

| | | |
|---|---|---|
| 65 | திருவாட்போக்கி | |
| 66 | (இரத்தினகிரி) | சுவாமி—இரத்நகிரிநாதர்<br>அம்மை—சுரும்பார்குழலி |
| 67 | திருக்கடம்பந்துறை | சுவாமி—கடம்பவனேசர்<br>அம்மை—முற்றிலாமுலையம்மை |
| 68 | திருப்பராய்த்துறை<br>(அகண்டகாவேரி) | சுவாமி—பராய்த்துறைநாதர்<br>அம்மை—பொன்மயில் அம்மை |
| 69 | திருக்கற்குடி<br>(உய்யக்கொண்டான்பெருமலை) | சுவாமி—உச்சிவநாதர்<br>அம்மை—அஞ்சனாட்சி |
| 70 | திருமூக்கீச்சுவரம்<br>(உறையூர்) | சுவாமி—பஞ்சவர்ணேச்சுவரர்<br>அம்மை—காந்திமதியம்மை |
| 71 | திருசிராப்பள்ளி | சுவாமி—மாத்ருபூதேச்வரர்<br>அம்மை-மட்டுவார்குழலியம்மை |
| 72 | திருஎறும்பியூர் | சுவாமி—எறும்பீசர்<br>அம்மை—நறுங்குழல்நாயகி |

73 மிருநன் னெடுங்களத்தின் மேவுமொப் பிலாட்குத்
தருநித் தியசுந் தரனே—புகழ்மேவும்
74 பண்பார்மே லைக்காட்டுப் பள்ளியில்வார் கொண்டமுலை
அன்பாக மேவுநீ யாடியே—நண்பார்ந்து
75 பூநாறும் ஆலம் பொழில்மேவி வாழ்கின்ற
ஞாநாம் பிகையாத்ம நாதனே—தேனார்
76 அழகால் அமர்ந்தவளோடு. ஆம்பூந் துருத்திப்
பழநகர்வாழ் புட்பவனப் பண்பா—எழில்சேர்ந்த
77 கண்டியூர் வாழ்மங் களநா யகிபுணரும்
இண்டைச் சடைவீரட் டேசனே—அண்டர்தொழும்
78 தன்னொப்பி லாளுடனே சார்ந்துசோற் றுத்துறையின்
மன்னுதொலை யாச்செல்வ வள்ளலே—நன்னயஞ்சேர்
79 வாய்த்ததிரு வேதிகுடி வாழ்மங்கை யர்க்கரசி
ஏத்துபுகழ் வேதபுரி ஈச்சுரனே—கேத்திரமாம்
80 தென்குடித் திட்டையினில் சேருலக நாயகிக்குப்
பங்கு கொடுத்த பசுபதியே—துங்கமிகு
81 பல்குடிசேர் புள்ளமங்கை பல்வளைக்கு நற்புயத்தை
நல்கு பசுபதி நாயகா—மல்குபுகழ்ச்
82 சக்கரப் பள்ளியினில் சார்ந்தவல்லி யங்கோதை
சொற்கிரங்கும் ஆலந் துறையானே—மிக்க
83 கருகாவூர் மேவும் கரும்பனையாள் மோகம்
முருகலர்த்தார் முல்லைவன மூர்த்தீ—பெருகுதிருப்
84 பாலைத் துறைசேர் பரைதவள வெண்ணகையாள்
மாலையிட்ட பாலை வனநாதா—சீலமிகு
85 போற்றுதிரு நல்லூர்வாழ் பூவைகிரி சுந்தரிக்கே
ஆற்றல்புரி யும்பெரிய ஆண்டவா—நாற்றிசையும்
86 காக்குமா வூர்மங் களநா யகியழகுக்கு
ஏற்கும் எழில்பசுப தீச்சுரனே—ஆக்குமருள்
87 சத்திமுத்த மேவுகின்ற தாய்பெரிய நாயகியாள்
சித்தம் மகிழும் சிவக்கொழுந்தே—அத்தர்புகழ்
88 பட்டீச் சுரமேவும் பல்வளை நாயகிசேர்
பட்டீச் சுரனே பராபரா—விட்டமிகும்

| | | |
|---|---|---|
| 73 | திருநெடுங்களம் | சுவாமி—நித்தியசுந்தரர்<br>அம்மை—ஒப்பிலாநாயகி |
| 74 | மேலைக்காட்டுப்பள்ளி<br>(மேலைத்திருக்காட்டுப்பள்ளி) | சுவாமி—தீயாடியப்பர்<br>அம்மை—வார்கொண்டமுலையாள் |
| 75 | திருஆலம்பொழில் | சுவாமி—ஆத்மநாதர்<br>அம்மை—ஞானம்பிகை |
| 76 | திருப்பூந்துருத்தி | சுவாமி—புஷ்பவனநாதர்<br>அம்மை—அழகார்ந்தநாயகி |
| 77 | திருக்கண்டியூர் | சுவாமி—வீரட்டேச்சுவரர்<br>அம்மை—மங்களநாயகி |
| 78 | திருச்சோற்றுத்துறை | சுவாமி—தொலையாச்செல்வர்<br>அம்மை—ஒப்பிலாவம்மை |
| 79 | திருவேதிகுடி | சுவாமி—வேதபுரியீசர்<br>அம்மை—மங்கையர்க்கரசி |
| 80 | திருத்தென்குடித்திட்டை | சுவாமி—பசுபதிநாதர்<br>அம்மை—உலகநாயகியம்மை |
| 81 | திருப்புள்ளமங்கை<br>(ஆலந்துறை) | சுவாமி—பசுபதிநாதர்<br>அம்மை—பல்வளைநாயகி |
| 82 | திருச்சக்கரப்பள்ளி<br>ராஜகிரி (ஐயம்பேட்டை) | சுவாமி—ஆலந்துறைநாதர்<br>அம்மை—அல்லியங்கோதைநாயகி |
| 83 | திருக்கருகாவூர் | சுவாமி—முல்லைவனநாதர்<br>அம்மை—கரும்பனையாயகி |
| 84 | திருப்பாலைத்துறை | சுவாமி—பாலைவனநாதர்<br>அம்மை—தவளவெண்ணகையம்மை |
| 85 | திருநல்லூர் | சுவாமி—பெரியாண்டவர்<br>அம்மை—பர்வதசுந்தரி |
| 86 | திருஆவூர்<br>(பசுபதீச்சுரம்) | சுவாமி—பசுபதீச்சுரர்<br>அம்மை—மங்களநாயகி |
| 87 | திருச்சத்திமுற்றம் | சுவாமி—சிவக்கொழுந்தீச்சுரர்<br>அம்மை—பெரியநாயகியம்மை |
| 88 | திருப்பட்டீச்சுரம் | சுவாமி—பட்டீச்சுரர்<br>அம்மை—பால்வளைநாயகி |

89 பார்மகிழ வாழும் பழையாறை ஊர்மேவும்
சோமகலா நாய்கிசேர் சோமேசா—காமலர்த்தேன்

90 வீழ்த்தும் வடதளியின் மேவும் கவுரியம்மை
வாழ்த்தும் வடதளி வள்ளலே—பூத்தவனம்

91 மன்னு வலஞ்சுழியின் வாழ்பெரிய நாயகியாட்கு
இன்னமுத மானகபர்த் தீச்சுரனே—நன்னயஞ்சேர்

92 பேரெயில்சூழ்ந் தின்பம் பெருகும் குடமூக்குக்
கூரயிற்கண் மங்களைசேர் கும்பேசா—சீரிருக்கும்

93 கோலக் குடந்தைக்கீழ்க் கோட்டப் பெரியம்மை
பாலுகந்து வாழ்மடந்தை பாகனே—சீலமிகும்

94 தேனர் மொழியுடன்வாழ் தென்குடந்தைக் காரோண
ஞானே தயச்சோம நாதனே—மீனர்கண்

95 குன்றமுலை நாயகியாள் கூடிநா கேச்சுரத்தில்
அன்றேவாழ் வுற்றசண்ப காரணியா—என்றும்

96 திருவார் இடைமருதில் சித்தம் மகிழ்ந்து
பெருநல மாமுலையாம் பெண்சேர்—மருதீசா

97 தென்குரங் காடுதுறைத் தேவிபவ ளக்கொடிசேர்
சங்கரர் ஆபத் சகாயனே—மங்காத

98 செல்வநீ லக்குடிசேர் தேவியழ காள்மருவும்
நல்லநா மம்முடைய நாயகா—முல்லைமலர்

99 வம்புலவும் வைகல் வரநகர்மா டக்கோயில்
கொம்பிளங் கோதைவைகற் கோமானே—இன்பமிகு

100 மங்கள நாயகியாள் வாய்த்ததிரு நல்லத்தில்
தங்கும் உமாமகே சச்சுடரே—எங்குமகிழ்ந்து

101 ஆர்ந்த திருக்கோழம் பத்தில் சவுந்தரியோடு
வேய்ந்துவள ருங்கோகி லேசுரனே—வாய்ந்ததிரு

102 ஆவடு தண்துறைக்கண் ஆனஒப்பி லாமுலையோடு
வேவிளங்கு மாமா சிலாமணியே—தேவர்தொழும்

103 செம்பொன்தியா கேசா திருத்துருத்தி மேவுகின்ற
அம்பொன் மிருதுமுகி யாம்பிகையோடு—இன்பமிகும்

104 உத்தர வேதீச் சுரனே திருவழுந்தூர்ச்
சத்திதரு மிக்க சவுந்தரியாட்கு—அத்தமருள்

| | | |
|---|---|---|
| 89 | திருப்பழையாறை<br>(ஆறைவடதளி) | சுவாமி—சோமேசர்<br>அம்மை—சோமகலாநாயகி |
| 90 | வடதளி | சுவாமி—வடதளிவள்ளல்<br>அம்மை—கவுரியம்மை |
| 91 | திருவலஞ்சுழி | சுவாமி—கபர்த்தீச்சுரர்<br>அம்மை—பெரியநாயகியம்மை |
| 92 | திருக்குடமூக்கு<br>(கும்பகோணம்) | சுவாமி—கும்பேச்சுவரர்<br>அம்மை—மங்களநாயகி |
| 93 | திருக்குடந்தைக்கீழ்க்கோட்டம்<br>(நாகேச்சுரர்கோவில்) | சுவாமி—மடந்தைபாகர்<br>அம்மை—பெரியநாயகி |
| 94 | திருக்குடந்தைக்காரோணம்<br>(காசிவிஸ்வநாதீஸ்வரர்கோவில்) | சுவாமி—சோமநாதர்<br>அம்மை—தேனார்மொழியம்மை |
| 95 | திருநாகேச்சுரம் | சுவாமி—சண்பகாரணியர்<br>அம்மை—குன்றமுலைநாயகி |
| 96 | திருஇடைமருதூர்<br>(மத்தியார்ச்சுனம்) | சுவாமி—மருதீச்சுவரர்<br>அம்மை—நன்முலைநாயகி |
| 97 | திருத்தென்குரங்காடுதுறை<br>(ஆடுதுறை) | சுவாமி—ஆபத்சகாயர்<br>அம்மை—பவளக்கொடியம்மை |
| 98 | திருநீலக்குடி<br>(தென்னல்லகுடி) | சுவாமி—நல்லநாயகேச்சுவரர்<br>அம்மை—அழகம்மை |
| 99 | திருவைகல்மாடக்கோவில் | சுவாமி—வைகல்நாதர்<br>அம்மை—கொம்பிவிளங்கோதை |
| 100 | திருநல்லம்<br>(கோநேரிராஜபுரம்) | சுவாமி—உமாமகேச்சுவரர்<br>அம்மை—மங்களநாயகி |
| 101 | திருக்கோழம்பம் | சுவாமி—கோகிலேச்சுவரர்<br>அம்மை—சவுந்தரநாயகி |
| 102 | திருஆவடுதுறை<br>(திருவாவடுதுறை) | சுவாமி—மாசிலாமணியீசர், செம்<br>[பொன் தியாகேசர்<br>அம்மை—ஒப்பிலாமுலையம்மை |
| 103 | திருத்துருத்தி<br>(குற்றாலம்—சோழநாடு) | சுவாமி—உத்தரவேதீச்சுரர்<br>அம்மை—முகிழாம்பிகை |
| 104 | திருவழுந்தூர்<br>தேரழுந்தூர் | சுவாமி—வேதபுரீசர்<br>அம்மை—சவுந்தரிநாயகி |

105 வேதபுரி ஈசா மிகுபுகழ்மா யூரத்து
மாதஞ்ச நாயகிசேர் மாயூரா—கோதில்லாத்

106 தோழியம்மை தானே துணையா விளநகரில்
வாழுந் துறைகாட்டு வள்ளலே--நாளும்

107 திருப்பறிய லூரில் திகழுமிளங் கொம்போடு
இருக்கும் புகழ்வீரட் டேசா—மருக்குலவும்

108 பாக சுகந்தவனப் பாவைசெம்பொன் பள்ளியினில்
போகமுறுஞ் சொர்ண புரேச்சுரா—வாகு

109 பருவதரா சன்புதல்வி பங்கினனி பள்ளி
உறுநல் துணையப்பா உண்மை—பெருகும்

110 வலம்புர மேவும் வடுவகிர்க்கண் தோயும்
வலம்புர நாதா வரதா—விலங்கும்

111 தலைச்சங்கா டேயும் சவுந்தரிதோள் தோயும்
அலைச்சங் கருள்நா யகனே—இலக்குமியை

112 ஆள்கட்க நேத்திரிநல் ஆக்கூரில் தோயும்எழில்
தோள்பெற் றிருக்குஞ் சுயம்புவே—வாள்பெற்ற

113 கண்ணபி ராமி கடவூரில் ஓர்பங்கில்
நண்ணும் அமுதகட நாயகா—எண்ணும்

114 தயாவம லக்குயமின் சாரும் கடவூர்
மயானப் பிரமபுரி மன்னு—பயோததிமான்

115 கூடுதிரு வேட்டக் குடிச்சாந்த நாயகியாள்
நாடும் திருமேனி நாயகா—நீடுதிரு

116 வீசுசத்தி யம்மையுடன் மிக்கதெளிச் சேரியினில்
தேசிலங்க வாழ்பார்ப்ப தீச்சுரா—நேசத்

117 தருமபுரம் மேவும் சதாமதுர மின்தோய்
அருமையுள்ள யாழ்மூரி யானே—பெருகுமின்பம்

118 பூண்டுபோ கம்ஆர்த்த பூண்முலையா ளோடுநள்ளாறு
ஈண்டமர்தர்ப் பாரணிய ஈச்சுரனே—மாண்டகுகோட்

119 டாற்றின் மிகுவண் டமர்பூங் குழலியொடு
தோற்றுமயி ராவதசு வாமியே—போற்றும்

120 பவளவர்ணப் பூங்குழலாள் பங்கிலமர் மேவும்
நவமார் பிரமபுரி நாதா—உவகைமா

| | | |
|---|---|---|
| 105 | திருமயிலாடுதுறை (மாயூரம்) | சுவாமி—மாயூரநாதர்<br>அம்மை—அஞ்சநாயகி-அபயாம்பிகை |
| 106 | திருவிளநகர் | சுவாமி—துறைகாட்டும்வள்ளலார்<br>அம்மை—தோழியம்மை |
| 107 | திருப்பறியலூர் | சுவாமி—வீரட்டேச்சுவரர்<br>அம்மை—இளங்கொம்பனையார் |
| 108 | திருச்செம்பொன்பள்ளி (செம்பனார்கோவில்) | சுவாமி—சுவர்ணபுரீச்சுவரர்<br>அம்மை—சுகந்தவனநாயகி |
| 109 | திருநனிப்பள்ளி (புஞ்சை) | சுவாமி—நல்துணையப்பர்<br>அம்மை—பர்வதராஜபுத்ரி |
| 110 | திருவலம்புரம் (பெரும்பள்ளம்) | சுவாமி—வலம்புரநாதர்<br>அம்மை—வடுவகிர்கண்ணியம்மை |
| 111 | திருத்தலைச்செங்காடு | சுவாமி—சங்கருள்நாயகர்<br>அம்மை—சவுந்தரியம்மை |
| 112 | திருஆக்கூர் (தான்தோன்றிமாடம்) | சுவாமி—சுயம்புநாதர்<br>அம்மை—கட்கநேத்திரியம்மை |
| 113 | திருக்கடவூர்வீரட்டம் | சுவாமி—அமிர்தகடேச்சுவரர்<br>அம்மை—அபிராமியம்மை |
| 114 | திருக்கடவூர்மயானம் | சுவாமி—பிரமபுரீச்சுவரர்<br>அம்மை—அமலக்குயமின்னம்மை |
| 115 | திருவேட்டக்குடி | சுவாமி—திருமேனியழகர்<br>அம்மை—சாந்தநாயகி |
| 116 | திருத்தெளிச்சேரி (கோயில்பத்து) | சுவாமி—பார்வதீச்சுவரர்<br>அம்மை—சக்தியம்மை |
| 117 | திருத்தருமபுரம் | சுவாமி—யாழ்மூரிநாதர்<br>அம்மை—மதுரமின்னம்மை |
| 118 | திருநள்ளாறு | சுவாமி—தர்ப்பாரண்யேச்சுவரர்<br>அம்மை—பூண்முலையம்மை |
| 119 | திருக்கோட்டாறு | சுவாமி—ஐராவதநாதர்<br>அம்மை—வண்டமர்பூங்குழலி |
| 120 | திருவம்பர்பெருந்திருக்கோயில் | சுவாமி—பிரமபுரிநாதர்<br>அம்மை—பூங்குழல்நாயகி |

121 காளத்தின் மேவுகின்ற கன்னிபட்ச நாயகிதன்
தோள்பெற்ற காளகண்டத் தோன்றலே—நீள்கதிக்கும்

122 பண்ணார்மீ யச்சூரில் பாவைசுந்த ரத்தலைவி
நண்ணும் திருமுயற்சி நாயகா—எண்ணுமிளம்

123 கோயிலிட மேவிக் குலவுமின்னு மேகலையோடு
ஏயும் சகலபுவ னேச்சுரா—ஆயுமருள்

124 பொற்கொடி நாயகியாள் போற்றுதில தைப்பதிசேர்
நற்குண முத்தேச நாயகா—சொற்குலவக்

125 கொண்டுவண் டார்பூங் குழலியொடு பாம்புரத்தில் [மு
இண்டைகொண்டு வாழ்பாம்பு ரேச்சுரனே—அண்டர்தொ

126 மங்கள நாயகிசேர் மன்னு சிறுகுடியில்
மங்களமாய்ச் சேருகின்ற மங்களா—பொங்குபுகழ்

127 மேம்படு வீழி மிழலையில்வாழ் சுந்தரகு
சாம்பிகைசேர் வீழி யழகனே—பூம்பொழில்சூழ்

128 வன்னியூர் மேவும் வளர்கவுரி பார்வதிக்கு
இன்னமுத மானவக்கி னீச்சுரா—பன்னுவறை

129 ஆயுங் கருவிலியை ஆளும் சருவாங்க
நாயகிசேர் சற்குணநன் னாயகா—தூயவன்பிற்

130 பேணு பெருந்துறையூர்ப் பேதை மலையரசி
பேணும் சிவானந்தப் பிஞ்ஞகா—மாணும்

131 நறையூர்சித் தீச்சரஞ்சேர் நங்கையழ கம்மைக்கு
இறையான சித்தநா தேசா—மறைசேர்

132 அரிசிற் கரைப்புத்தூர் ஆளுமழ கம்மை
பரவுபடிக் காசுவைத்த பண்பா—மருமருவு

133 போதார் சிவபுரத்துப் பொன்பெரிய நாயகிசேர்
நாதா பிரமபுரி நாயகா—மீதான

134 பண்பார் கலையநல்லூர்ப் பாவை யமுதவல்லி
நண்பார் அமுதகலை நாயகா—விண்போற்றும்

135 கிள்ளைசரு வாலங் கிருதமின்னோடு அன்பர்துயர்
தள்ளுங் கருக்குடிவாழ் சத்குணா—தெள்ளுமறை

136 மல்குதிரு வாஞ்சியத்தில் வாழவந்த நாயகிசேர்
நல்குசுக வாஞ்சிய நாதனே—செல்வப்

| | | |
|---|---|---|
| 121 | திருவம்பர்மாகாளம் (கோயில்திருமாகாளம்) | சுவாமி—காளகண்டேச்சுவரர் அம்மை—பக்ஷநாயகி |
| 122 | திருமீயச்சூர் | சுவாமி—முயற்சிநாயகர் அம்மை—சுந்தரநாயகி |
| 123 | திருமீயச்சூர்இளங்கோவில் | சுவாமி—சகலபுவனேச்சுவரர் அம்மை—மின்னுமேகலையம்மை |
| 124 | திருத்திலதைப்பதி (கோயில்பத்துமதிமுத்தம்) | சுவாமி—முத்தேச்சுவரர் அம்மை—பொற்கொடிநாயகியம்மை |
| 125 | திருப்பாம்புரம் | சுவாமி—பாம்புரேச்சுவரர் அம்மை—வண்டார்பூங்குழலியம்மை |
| 126 | திருச்சிறுகுடி | சுவாமி—மங்களநாதர் அம்மை—மங்களநாயகி |
| 127 | திருவீழிமிழலை | சுவாமி—வீழியழகர் அம்மை—சுந்தரகுஜாம்பிகை |
| 128 | திருவன்னியூர் | சுவாமி—அக்கினீச்சுவரர் அம்மை—பார்வதியம்மை |
| 129 | திருக்கருவிலி | சுவாமி—சத்குணநாயகர் அம்மை—சர்வாங்கநாயகி |
| 130 | திருப்பேணுபெருந்துறை (திருப்பந்துறை) | சுவாமி—சிவானந்தர் அம்மை—மலையரசியம்மை |
| 131 | திருநறையூர்சித்தீச்சுவரம் | சுவாமி—சித்தநாதர் அம்மை—அழகம்மை |
| 132 | அரிசிற்கரைபுத்தூர் (அழகார்புத்தூர், திருப்புத்தூர்) | சுவாமி—படிக்காசுவைத்தபரமர் அம்மை—அழகம்மை |
| 133 | திருச்சிவபுரம் | சுவாமி—பிரமபுரிநாதர் அம்மை—பெரியநாயகியம்மை |
| 134 | திருக்கலயநல்லூர் (சாக்கோட்டை) | சுவாமி—அமிர்தகலைநாதர் அம்மை—அமிர்தவல்லி |
| 135 | திருக்கருக்குடி (மருதாந்தநல்லூர்) | சுவாமி—சத்குணநாதர் அம்மை-சர்வாலங்கிருதமின்னம்மை |
| 136 | திருவாஞ்சியம் (ஸ்ரீவாஞ்சியம்) | சுவாமி—வாஞ்சீச்சுவரர் அம்மை—வாழவந்தநாயகி |

137 பெருநன் னிலத்துப் பெருங்கோயில் மேவும்
பிரகே சுரிசேர்பிர கேசா—மருவுதிருக்

138 கொண்டீச் சுரத்தில் குளிர்சாந்த நாயகிசேர்
எண்தோள் பசுபதியாம் எம்மானே—பண்டைமறை

139 நாடுந் திருப்பெரிய நாயகியோ டும்பனையூர்
கூடும் சவுந்தரனும் கொற்றவா—தேடரிய

140 விற்குடியில் வாழுகின்ற மின்வல வார்குழலி
நற்கணவா வீரட்ட நாயகா—சொற்கலைகள்

141 கற்கும் புகலூர்க் கருந்தார் குழலிமகிழ்
அக்கினி ஈசனெனும் அம்மானே—மிக்கவர்த்த

142 மானீச் சரமருவு மன்னுகருந் தார்குழலிக்கு
ஆனவர்த்த மானீச் சராதிபா—ஞானச்

143 சரிவார் குழலியொடு இராமனதீ சத்தின்
மருவுமிரா மேச வரதா—திருப்பயற்றூர்க்

144 காவியங் கண்ணி கணவா மறைபுகன்ற
நாவா திருப்பயற்றூர் நாதனே—பூவிருக்கும்

145 வாய்த்த திருக்குழல்நல் மாதுசெங்காட் டங்குடியில்
ஏத்துகண வாகணப தீச்சுரா—பூத்தமலர்

146 துன்னுவண்டு வார்குழலித் தோகையொடு மாமருகல்
மன்னுகின்ற மாணிக்க வண்ணனே—பொன்னெழில்சூழ்

147 சாத்தமங்கை மேவுகின்ற தையல்மலர்க் கண்ணம்மை
ஏத்து மயவந்தி ஈச்சுரனே—வாய்த்ததிரு

148 நீள்நாகைக் காரோண நீலாய தாட்சியையே
காணுங்கா யாரோ கணேசனே—மாணுறுநல்

149 சிக்கலிலோர் பங்கிற் திகழ்வேல் நெடுங்கண்ணி
நிற்க மகிழுநவ நீதனே—மிக்கபுகழ்க்

150 கீழ்வேளூர் மேவுகின்ற கிள்ளை வனமுலையாள்
வாழ்வட் சயநாத மன்னவா—தாழ்வில்லா

151 மாவிரவு தேவூர் வளர்மதுர பாடணிசேர்
தேவகுரு நாதனெனும் சின்மயா—மாவிரதர்

152 நண்ணுபள்ளி முக்கூடல் நாயகியாள் மைம்மேவும்
கண்ணிபுணர் முக்கோணக் கண்ணுதலே—விண்ணவர்பூ

| | | |
|---|---|---|
| 137 | திருநன்னிலத்துப் பெருங்கோவில் | சுவாமி—ப்ரகேச்சுவரர்<br>அம்மை—ப்ரகேச்வரியம்மை |
| 138 | திருக்கொண்டீச்சுவரம் | சுவாமி—பசுபதிநாதர்<br>அம்மை—சாந்தநாயகியம்மை |
| 139 | திருப்பனையூர் | சுவாமி—சவுந்தரநாதர்<br>அம்மை—பெரியநாயகியம்மை |
| 140 | திருவிற்குடி (வீரட்டம்) | சுவாமி—வீரட்டநாதர்<br>அம்மை—ஏலவார்குழலியம்மை |
| 141 | திருப்புகலூர் | சுவாமி—அக்கினீச்சுவரர்<br>அம்மை—கருந்தார்குழலியம்மை |
| 142 | திருப்புகலூர்வர்த்தமானீச்சரம் | சுவாமி—வர்த்தமானீச்சுவரர்<br>அம்மை—கருந்தார்குழலியம்மை |
| 143 | திருவிராமனதீச்சுரம் | சுவாமி—இராமநாதர்<br>அம்மை—சரிவார்குழலியம்மை |
| 144 | திருப்பயற்றூர் (பயற்றங்குடி) | சுவாமி—பயற்றூர்நாதர்<br>அம்மை—காவியங்கண்ணி |
| 145 | திருச்செங்காட்டங்குடி (கணபதீச்சுவரம்) | சுவாமி—கணபதீச்சுவரர்<br>அம்மை—திருக்குழல்மாதம்மை |
| 146 | திருமருகல் | சுவாமி—மாணிக்கவண்ணர்<br>அம்மை—வண்டுவார்குழலி |
| 147 | திருச்சாத்தமங்கை | சுவாமி—அயவந்திநாதர்<br>அம்மை—மலர்க்கண்ணம்மை |
| 148 | திருநாகைக்காரோணம் (நாகப்பட்டினம்) | சுவாமி—காயாரோகணேசர்<br>அம்மை—நீலாயதாக்ஷியம்மை |
| 149 | திருச்சிக்கல் | சுவாமி—நவநீதநாதர்<br>அம்மை—வேல்நெடுங்கண்ணியம்மை |
| 150 | திருக்கீழ்வேளூர் | சுவாமி—அக்ஷயநாதர்<br>அம்மை—வனமுலைநாயகி |
| 151 | திருத்தேவூர் | சுவாமி—தேவகுருநாதர்<br>அம்மை—மதுரபாஷிணியம்மை |
| 152 | திருப்பள்ளியின்முக்கூடல் (அரிகரியான்பள்ளி) | சுவாமி—முக்கோணநாதர்<br>அம்மை—மைமேவுங்கண்ணி |

153 மல்குதிரு வாரூர்வாழ் மங்கையல்லி யங்கோதை
புல்கியவன் மீகப் புராதனா—நல்குமருள்

154 ஆதிபனாய் ஆடரவக் கிண்கிணிக்கா லானடங்கொள்
வீதி விடங்க விமலனே—நீதி

155 அகிலே சுரிசேர் அரனெறி மேவும்
அகிலே சுரனே அரனே—மிகுபரவை

156 உண்மண் தளியுள் உறும்பஞ்சின் மெல்லடியாள்
மண்மகிழ வாழுமண்ட லேசுரா—விண்மகிழும்

157 யாழினும் மென்மொழியாள் இன்ப விளமர்தனில்
வாழும்ப தஞ்சலிம னோகரா—சூழமரர்

158 மன்னுங் காவீரம் மல்கும் பிரத்தியட்ச
மின்னம்மை மேவுகா வீரனே—மன்னுபெரு

159 வேளூர் இறைகொண்ட மின்வல வார்குழலி
நாளும் பிரியாத நாதனே—ஆளும்அருள்

160 காட்டு தலையாலங் காட்டுத் திருமடந்தை
மாட்டுகந்தே யாட வலவாதா—தீட்டுசெம்பொன்

161 கோயில்குட வாயிலாக் கொண்டுநித மும்பெரிய
நாயகிசேர் கோணேச நாயகா—தூயமறை

162 மன்னுசே றைப்பதியில் வாழ்ஞான வல்லியுடன்
செந்நெறியப் பாநற் செகதீசா—உன்னதஞ்சேர்

163 நாலூர் மயானத்து நற்பெரிய நாயகியாள்
பால்சேர் பலாசவனப் பண்பனே—ஞாலமகிழ்

164 காசி கடுவாய்க் கரைப்புத்தூர் சொர்ணபு
ரேசுரிசேர் சொர்ணபு ரேச்சுரா—நேசர்புகழ்ந்து

165 ஒருமிரும் பூளை எனுந்தலத்தின் மாதுமையாள்
ஆரும் புகழ்காசி ஆரணியா—சீரூர்

166 அரதைப் பெரும்பாழி அம்மைஅலங் காரம்
மருவும் பாதாள வரதா—பொருவில்

167 அவளிவணல் லூரில் அணிசௌந்திர வல்லி
நவமுறவா ழுஞ்சாட்சி நாதா—புவனி

168 நயமங் களநா யகிசேர் பரிதி
நியமப் பரிதியப்ப நீதா—உயருலகுக்கு

| | | |
|---|---|---|
| 153 | திருவாரூர் மூலஸ்தானம் | சுவாமி—வன்மீகநாதர். தியாகேசர் |
| | | அம்மை—அல்லியங்கோதையம்மை |
| 154 | ,, | சுவாமி—வீதிவிடங்கப்பெருமான் |
| | | அம்மை—தியாகவல்லி |
| 155 | திருவாரூர் அரநெறி | சுவாமி—அகிலேச்சுவரர் |
| | | அம்மை—அகிலேச்சுவரி |
| 156 | திருவாரூர்பரவையுண்மண்டளி | சுவாமி—மண்டலேச்சுவரர் |
| | (துலாநாயனார்கோவில்) | அம்மை—பஞ்சின்மெல்லடியாள் |
| 157 | திருவிளமர் | சுவாமி—பதஞ்சலிமனோகரர் |
| | | அம்மை—யாழினும்மென்மொழியம் |
| 158 | திருக்கரவீரம் | சுவாமி—கரவீரநாதர் [மை |
| | (கரையபுரம்) | அம்மை-பிரத்தியக்ஷமின்னம்மை |
| 159 | திருப்பெருவேளூர் | சுவாமி—பிரியாதநாதர் |
| | (காட்டூர் ஐயம்பேட்டை) | அம்மை—ஏலவார்குழலி |
| 160 | திருத்தலையாலங்காடு | சுவாமி—ஆடவல்லவரதர் |
| | | அம்மை—திருமடந்தை |
| 161 | திருக்குடவாயில் | சுவாமி—கோணேசநாதர் |
| | | அம்மை—பெரியநாயகியம்மை |
| 162 | திருச்சேறை | சுவாமி—செந்நெறியப்பர் |
| | (உடையார்கோவில்) | அம்மை—ஞானவல்லி |
| 163 | திருநாலூர்மயானம் | சுவாமி—பலாசவனநாதர் |
| | (நாத்தூர்) | அம்மை—பெரியநாயகியம்மை |
| 164 | திருக்கடுவாய்க்கரைப்புத்தூர் | சுவாமி—சுவர்ணபுரீச்சுவரர் |
| | | அம்மை—சுவர்ணபுரீச்சுவரி |
| 165 | திருவிரும்பூளை | சுவாமி—காசியாரண்யர் |
| | (ஆலங்குடி) | அம்மை—உமையம்மை |
| 166 | திருவரதைப்பெரும்பாழி | சுவாமி—பாதாளவரதர் |
| | (அரித்துவாரமங்கலம்) | அம்மை—அலங்காரவம்மை |
| 167 | திருவவளிவணல்லூர் | சுவாமி—சாக்ஷிநாதர் |
| | | அம்மை—சவுந்தரவல்லி |
| 168 | திருப்பரிதிநியமம் | சுவாமி—பரிதியப்பர் |
| | (பருதியப்பர்கோவில்) | அம்மை—மங்களநாயகி |

169 ஆதிவெண்ணி யூர்சேர் அழகிய நாயகியுள்
காதல்மிகு வெண்ணிக் கரும்பேநற்—போதமிகு

170 பூவனூர்க் கற்பகத்தைப் புல்லுகின்ற புட்பவனத்
தேவனே தேவ சிகாமணியே—மாவளமை

171 தோற்றுபா தாளீச் சுரவமுத நாயகியாள்
போற்றியிடுஞ் சர்ப்ப புரேசனே—தேற்றத்

172 திருக்கள ரூரில் திகழுமிளங் கொம்போடு
இருக்கும் களர்முளை ஈசா—மருக்குலவு

173 சிற்றேமம் மேவும் திகழகிலாண் டேச்சுரிதோள்
நத்துகின்ற பொன்வைத்த நாயகா—உற்ற

174 திருவுசாத் தானத்துச் சேர்பெரிய நங்கை
மருவனுறு மந்திரபு ரேசா—திருவாரூர்

175 இடும்பா வனத்தி லெழின்மங் கைசேர்
குடும்பா மிகுசத் குணனே—தடஞ்சூழ்

176 கடிக்குளஞ்சேர் கற்பகனே கார்கனித்தே மாவின்
வடுக்கண் சவுந்தரிதோய் வாழ்வே—படிக்குள்மிகு

177 தண்டலை நீள்நெறியில் சார்நீள் நெறிநாதா
தொண்டர்பணி ஞானம் பிகைதுணைவா—கண்டமுதை

178 வாட்டு மதுர வசனியுட னேமகிழ்ந்து
கோட்டூர் மருவுங் கொழுந்தீசா—நாட்டுபுகழ்

179 வெண்துறை வேல்நெடுங்கண் மெல்லிதனக் கின்பருளும்
வெண்துறை நாத விமலனே—தண்தமிழ்சேர்

180 கொள்ளம்பூ தூர்மேவுங் கோலச் சவுந்தரிசேர்
வள்ளலே வில்வ வனேச்சுரா—தெள்ளுபுகழ்ப்

181 பேரெயிலில் வாழ்பெரிய பெண்ணமுத மேவுகின்ற
சீருடைய மிக்க சகதீசா—வார்கொள்ளிக்

182 காடு குளிரக் கமழ்பஞ்சின் மெல்லடியாள்
கூடுமக்கி னீசா குருமணியே—நீடு

183 திருத்தெங்கூர் இல்பெரிய நாயகிசேர் தெய்வ
மருத்தங்கு வெள்ளி மலையே—தருத்தங்கு

184 நெல்லிக்கா மேவு நிகழ்மங் களமாது
புல்லுகின்ற நெல்லிவனப் புண்ணியா—நல்லவர்சேர்

| | | |
|---|---|---|
| 169 | திருவெண்ணியூர்<br>(கோயில்வெண்ணி) | சுவாமி—வெண்ணிநாதர்<br>அம்மை—அழகியநாயகி |
| 170 | திருப்பூவனூர் | சுவாமி—புஷ்பவனநாதர்<br>அம்மை—கற்பகவல்லி |
| 171 | திருப்பாதாளீச்சுவரம்<br>(பாமணி) (பாம்பணி) | சுவாமி—சர்ப்பபுரீச்சுவரர்<br>அம்மை—அமிர்தநாயகியம்மை |
| 172 | திருக்களர் | சுவாமி—களர்முளையீச்சுவரர்<br>அம்மை—இளங்கொம்பன்னாள் |
| 173 | திருச்சிற்றேமம்<br>(சிற்றும்பூர், எழிலூர்நேமம்) | சுவாமி—பொன்வைத்தநாயகர்<br>அம்மை—அகிலாண்டேச்சுவரி |
| 174 | திருவுசாத்தானம்<br>(திருக்கோயிலூர்) | சுவாமி—மந்திரபுரீச்சுவரர்<br>அம்மை—பெரியநாயகியம்மை |
| 175 | திருவிடும்பாவனம் | சுவாமி—சற்குணநாதர்<br>அம்மை—மங்களாம்பிகை |
| 176 | திருக்கடிக்குளம்<br>(கற்பகனூர்கோவில்) | சுவாமி—கற்பகநாதர்<br>அம்மை—சவுந்தரநாயகி |
| 177 | திருத்தண்டலைநீள்நெறி<br>(தண்டலைச்சேரி) | சுவாமி—நீள்நெறிநாதர்<br>அம்மை—ஞானம்பிகை |
| 178 | திருக்கோட்டூர் | சுவாமி—கொழுந்தீச்சுவரர்<br>அம்மை—மதுரவசனியம்மை |
| 179 | திருவெண்துறை | சுவாமி—வெண்துறைநாதர்<br>அம்மை—வேல்நெடுங்கண்ணியம்மை |
| 180 | திருக்கொள்ளம்பூதூர்<br>(திருக்களம்பூர்) | சுவாமி—வில்வவனேச்சுவரர்<br>அம்மை—சவுந்தரநாயகியம்மை |
| 181 | திருப்பேரெயில்<br>(ஓகைப்பேரையூர்) | சுவாமி—சகதீச்சுவரர்<br>அம்மை—பெண்ணமுதநாயகி |
| 182 | திருக்கொள்ளிக்காடு | சுவாமி—அக்கினீச்சுவரர்<br>அம்மை—பஞ்சின்மெல்லடியாள் |
| 183 | திருத்தெங்கூர் | சுவாமி—வெள்ளிமலைநாதர்<br>அம்மை—பெரியநாயகியம்மை |
| 184 | திருநெல்லிக்கா | சுவாமி—நெல்லிவனநாதர்<br>அம்மை—மங்களநாயகி |

185 நாட்டியத் தான்குடிவாழ் ரத்னகிரி நாதாநல்
தோட்டுமலர் மங்கை துணைவனே—ஈட்டுதிருக்
186 காருயின் மேவும் கயிலாச நாயகிசேர்
ஏறூர்ந்த கண்ணு யிரத்தானே—மீறுமெழில்
187 மாதுமை நாயகிசேர் மார்பாகன் ரூப்பூர்வாழ்
நாதா நடுதறிநன் னுயகா—நீதி
188 வலிவல மேவு மனத்துணையே கும்ப
முலைமாழை யங்கண்ணி மோகா—நலமேவு
189 கைச்சின வெள்வளையாள் கண்ணாரக் கண்டுதினம்
நச்சியிடுங் கைச்சினநன் னுயகா—மெச்சுமருள்
190 கொண்டலே கோளிலிவாழ் கோளிலிநா தாவினிய
வண்டமர் பூங்குழலி மன்னவா—தொண்டர்தொழும்
191 பாலினும் நன்மொழியாள் பாங்கா திருவாய்மூர்ச்
சூலதரா வாய்மூர்ச் சுவாமியே—கோலமிகு
192 யாழைப் பழித்தமொழி யாளொடுவே தாரணியம்
வாழத் திகழ்மறைக்காட் டீசனே—சூழமரர்
193 வாகுஅகத்தி யான்பள்ளி மங்கைபா கம்பிரியாள்
மோக அகத்தீச முன்னவா—மாகுழகா
194 கோடியின் மேவுகின்ற கோதைமை யார்தடங்கண்
தேடும் அமிர்தகடச் செல்வனே—நீடுபுகழ்ச்
195 சோழமண்ட லத்தினாற் றுத்தொண்ணூ ருகுமப்பால்

ஈழநாட்டுத்தலம்—2.

ஈழமண்ட லத்தில் இலங்குபதி—வாழ்வுமிகு
196 மன்னு திருக்கோண மாமலையின் மாதுமைசேர்
பொன்னேகோ ணேசப் புராதனு—நன்னயஞ்சேர்
197 கேதீச் சரத்தில் கவுரியுடன் வாழ்கின்ற
கேதீச் சுராவேத கீதனே—நீதிதிகழ்

பாண்டிநாட்டுத்தலம்—14.

198 ஒண்ணிதியப் பாண்டிநன்னாட் டோங்கு மதுரைகயல்
கண்ணிமகிழ் சொக்கலிங்கக் கண்ணுதலே—எண்ணுபுகழ்

185 திருநாட்டியத்தான்குடி — சுவாமி—ரத்னகிரிநாதர்
அம்மை—மலர்மங்கைநாயகி
186 திருக்காறுயில் (திருக்காறைவாசல்) — சுவாமி—கண்ணுயிரநாதர்
அம்மை—கைலாசநாயகி
187 திருக்கன்றுப்பூர் — சுவாமி—நடுதறியப்பர்
அம்மை—உமையம்மை
188 திருவலிவலம் — சுவாமி—மனத்துணைநாதர்
அம்மை—மாழையங்கண்ணியம்மை
189 திருக்கைச்சினம் — சுவாமி—கைச்சினநாதர்
அம்மை—வெள்வளைநாயகி
190 திருக்கோளிலி (திருக்குவளை) — சுவாமி—கோளிலிநாதர்
அம்மை—வண்டமர்பூங்குழலி
191 திருவாய்மூர் (திருத்தென் திருவாய்மூர்) — சுவாமி—திருவாய்மூர்நாதர்
அம்மை—பாலினும்நன்மொழியம்மை
192 திருமறைக்காடு (வேதாரண்யம்) — சுவாமி—மறைக்காட்டீச்சுவரர்
அம்மை—யாழைப்பழித்தமொழியம்[மை
193 திருவகத்தியான்பள்ளி — சுவாமி—அகஸ்தீச்சுவரர்
அம்மை—பாகம்பிரியாமங்கை
194 திருக்கோடி (குழகர்கோவில்) — சுவாமி—அமிர்தகடநாதர்
அம்மை—மையார்தடங்கண்ணியம்[மை
195

## ஈழநாட்டுத்தலம்—2.

196 திருக்கோணமலை — சுவாமி—கோணேசர்
அம்மை—உமைமாது
197 திருக்கேதீச்சுவரம் — சுவாமி—கேதீச்சுவரர்
அம்மை—கௌரியம்மை

## பாண்டிநாட்டுத்தலம்—14.

198 திருவாலவாய் (மதுரை) — சுவாமி—சொக்கலிங்கமூர்த்தி
அம்மை—கயற்கண்ணியம்மை.
மீனாக்ஷியம்மை

199 ஆப்பனூர் மேவுகின்ற அம்பிகையோ டெவ்வுலகும்
காப்பவனே யாப்பனூர்க் காரணா—பூப்புகழும்

200 அன்பார் திருப்பரங்குன் றாவுடை நாயகிசேர்
நன்பால் பரங்கிரிநன் னாயகா—இன்பார்

201 திருவே டகத்தில் திகழுமுமா தேவி
மருவேட நாத வரதா—பெருகுகொடுங்

202 குன்றத் துறையும் குயிலமுத நாயகிசேர்ந்து
என்று மகிழ்கொடுங்குன் றீச்சுரனே—துன்றும்

203 திருப்புத்தூர் மேவும் சிவகாமி பங்கில்
இருக்கும் திருப்புத்தூர் ஈசா—திருப்புனவாய்

204 இல்கண் திகழ்கருணை ஈசுரியைக் கண்டுமகிழ்
நல்கண் பழம்பதிநன் னாயகா—விற்கையனி

205 ராமேச் சரமேவும் ராமநா தாவாசத்
தாமபர்வ தவ்வர்த் தனிக்கின்பா—ஓமமிகு

206 மாடானை யம்பதியி லம்பா யிரவல்லி
நாடுகின்ற ஆதிரத்ன நாதனே—நீடுமயில்

207 கூராரும் கண்பொன் கொடிமகமா யிக்கருளும்
காராரும் கானப்பேர்க் காளையே—பேராரும்

208 பூவணமின் னம்மை புகழ்பூ வணநாதா
தூவண மேனிச் சுடர்க்கொழுந்தே—தேவி

209 துணைமாலை யோடும் சுழியனகர் மேவும்
இணையாம் திருமேனி ஈசா—உணர்வாய்க்

210 குழல்வாய் மொழியினொடும் குற்றால மேவும்
குழகா குறும்பலாக் கோவே—அழகுதிரு

211 நெல்வேலி மேவு நிகரிலாக் காந்திமதிச்
செல்வமே வேணுவனச் சிங்கமே—பல்வளஞ்சேர்

212 பன்னான் கெனுமிப் பதிக்கப்பால் மாமலைநாட்டு
அந்நாள்வன் தொண்டர்க் கருள்செய்து—மன்னுதிரு

## மலைநாட்டுத்தலம்—1.

213 வஞ்சைக் களத்தினுமை அம்மையுடன் வாழ்கின்ற
கஞ்சமுகத் தஞ்சைக் களத்தப்பா—மிஞ்சுகொங்க

| | | |
|---|---|---|
| 199 | திருஆப்பனூர் (திருவாப்புடையார்கோவில்) | சுவாமி—ஆப்பனூர்க்காரணர் அம்மை—அம்பிகை |
| 200 | திருப்பரங்குன்றம் | சுவாமி—பரங்கிரிநாதர் அம்மை—ஆவுடைநாயகி |
| 201 | திருவேடகம் | சுவாமி—ஏடகநாதர் அம்மை—உமாதேவி |
| 202 | திருக்கொடுங்குன்றம் (பிரான்மலை) | சுவாமி—கொடுங்குன்றீசர் அம்மை—குயிலமுதநாயகி |
| 203 | திருப்புத்தூர் | சுவாமி—புத்தூரீசர் அம்மை—சிவகாமி அம்மை |
| 204 | திருப்புனவாயில் | சுவாமி—பழம்பதிநாதர் அம்மை—கருணேச்சுவரி |
| 205 | திருஇராமேச்சுவரம் | சுவாமி—இராமநாதர் அம்மை—பர்வதவர்த்தனி |
| 206 | திருவாடானை | சுவாமி—ஆதிரத்னநாதர் அம்மை—அம்பாயிரவல்லி |
| 207 | திருக்கானப்பேர் (காளையார்கோவில்) | சுவாமி—காளையப்பர் அம்மை—மகமாயி அம்மை |
| 208 | திருப்பூவணம் | சுவாமி—பூவணநாதர் அம்மை—மின்னம்மை |
| 209 | திருச்சுழியல் | சுவாமி—திருமேனிநாதர் அம்மை—துணைமாலைநாயகி |
| 210 | திருக்குற்றாலம் | சுவாமி—குறும்பலாநாதர் அம்மை—குழல்வாய்மொழியம்மை |
| 211 | திருநெல்வேலி | சுவாமி—வேணுவனநாதர் அம்மை—காந்திமதிநாயகி |
| 212 | ... | ? |

மலைநாட்டுத்தலம்—1.

| | | |
|---|---|---|
| 213 | திருவஞ்சைக்களம் | சுவாமி—அஞ்சைக்களத்தப்பர் அம்மை—உமையம்மை |

## கொங்குநாட்டுத்தலம்—7.

214 நாட்டிலவி நாசிப் பெருங்கருணை நாயகியார்
நாட்ட மகிழுமவி நாசியப்பா—தீட்டும்
215 திடமார் திருமுருகன் பூண்டித் திருவா
உடைசேர் முருகா உடையாய்—படியில்
216 பவானிகூ டல்சேர் பரைவேத மங்கைக்கு
அவாமிகுந்த சங்கமுக வாதீ—தவாதுநிதம்
217 அன்பர்தொழும் செங்குன்றூர் அர்த்தநா ரீச்சுரிசேர்
இன்பமே அர்த்தநா ரீச்சுரா—மன்புகழ்சேர்
218 வெஞ்சமாக் கூடல் விகிர்தே சுரிமகிழும்
இன்சொல் புகழும்விகிர் தேசனே—விஞ்சுமதி
219 ஆனனப் பண்மொழியோடு ஆன கொடுமுடிவாழ்
கோனே கொடுமுடியாங் கொற்றவா—வேல்நெடுங்கண்
220 உற்றகிரு பாநா யகியோடு மானிலையைப்
பற்று கருவூர்ப் பசுபதியே—மற்றப்
221 பதியேழுக் கப்பால் பகருநடு நாட்டில்
துதிசெய்து விண்ணோர் தொழவாழ்—முதிரும்

## நடுநாட்டுத்தலம்—22.

222 அரத்துறை யாநந்த நாயகிக்கன் பாகும்
அரத்துறை நாதா அமலா—நிருத்தமுறு
223 தூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே பாங்கொருதாய்
ஆங்கடந்தை நாயகிபங் காளனே—பாங்கான
224 கூடலையாற் றூரில் குலவும் புரிகுழலாள்
நாட நெறிகாட்டு நாயகா—வாடுமிடை
225 நீலமலர்க் கண்ணியுடன் நீளொருக்கத் தம்புலியூர்ப்
பாலுகந்த நீலகண்டப் பண்ணவா—கோலத்
226 திருத்தினை யூரில் திகழுமிளங் கொம்போடு
இருக்கும் திருந்தீச் சுரனே—பெருத்ததிருச்
227 சோபுர மாநகரில் சோபுர நாயகிசேர்
சோபுர நாத சுவாமியே—மாபுனிதர்

## கோங்குநாட்டுத்தலம்—7.

| | | |
|---|---|---|
| 214 | திருப்புக்கொளியூர் (அவிநாசி) | சுவாமி—அவிநாசியப்பர்<br>அம்மை—பெருங்கருணைநாயகி |
| 215 | திருமுருகன்பூண்டி | சுவாமி—முருகாவுடையார்<br>அம்மை—ஆவுடைநாயகி |
| 216 | திருபவானிகூடல் (திருநணா) | சுவாமி—சங்கமுகநாதர்<br>அம்மை—வேதமங்கையம்மை |
| 217 | திருக்கொடிமாடச்செங்குன்றூர் (திருச்செங்குன்றூர்) | சுவாமி—அர்த்தநாரீச்சுவரர்<br>அம்மை—அர்த்தநாரீச்சுவரி |
| 218 | திருவஞ்சமாக்கூடல் | சுவாமி—விகிர்தேச்சுவரர்<br>அம்மை—விகிர்தேச்வரி |
| 219 | திருப்பாண்டிக்கொடுமுடி (கொடுமுடி) | சுவாமி—கொடுமுடிநாதர்<br>அம்மை—பண்மொழியம்மை |
| 220 | திருக்கருவூர் ஆனிலை | சுவாமி—பசுபதிநாதர்<br>அம்மை—கிருபாநாயகி |
| 221 | | |

## நடுநாட்டுத்தலம்—22.

| | | |
|---|---|---|
| 222 | திருஅரத்துறை | சுவாமி—அரத்துறைநாதர்<br>அம்மை—ஆனந்தநாயகி |
| 223 | திருத்தூங்கானைமாடம் (பெண்ணாகடம்) | சுவாமி—சுடர்க்கொழுந்துநாதர்<br>அம்மை—கடந்தைநாயகி |
| 224 | திருக்கூடலையாற்றூர் | சுவாமி—நெறிகாட்டுநாயகர்<br>அம்மை—புரிகுழல்நாயகி |
| 225 | திருஎருக்கத்தம்புலியூர் (இராஜேந்திரப்பட்டினம்) | சுவாமி—நீலகண்டர்<br>அம்மை—நீலமலர்க்கண்ணி |
| 226 | திருத்திணைநகர் (தீர்த்தனகரி) | சுவாமி—திருந்தீச்சுவரர்<br>அம்மை—இளங்கொம்பன்னாள் |
| 227 | திருச்சோபுரம் (தியாகவல்லி) | சுவாமி—சோபுரநாதர்<br>அம்மை—சோபுரநாயகி |

228 நட்பாம் திருவதிகை நாயகிமே வும்மதிகை
அப்பாவீ ரட்டானத் தம்மானே—எப்போதும்

229 நந்தூரும் நாவலூர் நங்கைசுந்த ராம்பிகைசேர்
இந்தூர் சடைநாவ லேச்சுரா—சுந்தரமாம்

230 விர்த்தா சலமேவு மின்பெரிய நாயகியாள்
பர்த்தாவாய் மிக்க பழமலையே—கர்த்தாவாய்

231 நெல்வெண்ணெ யூர்மேவு நீலமலர்க் கண்ணாள்சேர்
வில்வமுடி வெண்ணெய் விகிர்தனே—செல்வமிகும்

232 கோவல்வீ ரட்டம் குலவுசிவா னந்தவல்லி
மேவும்வீ ரட்டேச வித்தகா—மேவி

233 அறையணிநல் லூரில் அருள்நா யகிசேர்
அறையணி நாதா வரனே—நிறைசேர்

234 இடையாற்றில் வாழ்சிற் றிடைநா யகிசேர்
அடலேற் றிடையாற் றரசே—நெடியதிரு

235 வெண்ணெய்நல்லூ ரில்தடுத்தாட் கொண்ட விமலாவேல்
கண்மங்கை நாயகிசேர் காதலா—வண்ணத்

236 துறையூர்த் திருநகர்வா ழுந்துறையூ ரப்பா
நறையார்பூங் கோதையுமை நண்பா—முறையாம்

237 வடுகூர் வடுவகிர்க்கண் மங்கைபங்கா மால்கண்
இடவாழி ஈந்தவடு கேசா—தொடியணிகை

238 மாணிக்க வல்லியுடன் மாணி குழிமருவு
மாணிக்க மேனி வரதனே—நீள்நிலத்தில்

239 சேகறுசீர் கொண்ட திருப்பா திரிப்புலியூர்த்
தோகைபுணர் தோன்றாத் துணைவனே—வாகுதிரு

240 முண்டீச் சரநகர்வாழ் முண்டீசா கூரயிற்கண்
கொண்டகா ணார்குழலி கொண்கனே—அண்டர்

241 திகழ்பனங்காட் டூரில் திருப்புறவ மின்னாள்
மகிழ்பனங்காட் டீச வரதா—மிகுபுகழ்சேர்

242 ஆமாத்தூர் மேவு மழகிய நாயகியுட்
காமார்த்த மாமழகு காதலா—தேமார்த்த

243 வண்ணா மலைசேர் அருணா சலாகருணை
உண்ணா முலைசேரும் உத்தமா—எண்ணும்

| | | |
|---|---|---|
| 228 | திருவதிகைவீரட்டம் | சுவாமி—அதிகைவீரட்டநாதர்<br>அம்மை—அதிகைநாயகி |
| 229 | திருநாவலூர் | சுவாமி—நாவலேச்சுவரர்<br>அம்மை—சுந்தராம்பிகை |
| 230 | திருமுதுகுன்றம்<br>(விருத்தாசலம்) | சுவாமி—பழமலைநாதர்<br>அம்மை—பெரியநாயகி |
| 231 | திருநெல்வெண்ணெய்<br>(நெய்வெண்ணெய்) | சுவாமி—வெண்ணெயப்பர்<br>அம்மை—நீலமலர்க்கண்ணி |
| 232 | திருக்கோவலூர்வீரட்டம் | சுவாமி—வீரட்டநாதர்<br>அம்மை—சிவானந்தவல்லி |
| 233 | திருஅறைஅணிநல்லூர்<br>(அறைகண்டநல்லூர்) | சுவாமி—அறையணிநாதர்<br>அம்மை—அருள்நாயகி |
| 234 | திருவிடையாறு<br>(இடங்கழுநர்) | சுவாமி—இடையாற்றுநாதர்<br>அம்மை—சிற்றிடைநாயகி |
| 235 | திருவெண்ணெய்நல்லூர் | சுவாமி—தடுத்தாட்கொண்டநாதர்<br>அம்மை—வேற்கண்மங்கை |
| 236 | திருத்துறையூர்<br>(திருத்தலூர்-திருத்தளூர்) | சுவாமி—துறையூர்நாதர்<br>அம்மை—பூங்கோதைநாயகி |
| 237 | திருவடுகூர்<br>(ஆண்டார்கோவில்) | சுவாமி—வடுகூர்நாதர்<br>அம்மை—வகிர்க்கண்மங்கை |
| 238 | திருமாணிகுழி | சுவாமி—மாணிக்கவரதர்<br>அம்மை—மாணிக்கவல்லி |
| 239 | திருப்பாதிரிப்புலியூர் | சுவாமி—தோன்றாத்துணைநாதர்<br>அம்மை—தோகைநாயகி |
| 240 | திருமுண்டீச்சுவரம்<br>(திருக்கண்டீச்சுவரம்) | சுவாமி—முண்டீச்சுவரர்<br>அம்மை—கானார்குழலியம்மை |
| 241 | திருப்பனங்காட்டூர்<br>(பனையபுரம்) | சுவாமி—பனங்காட்டீச்சுவரர்<br>அம்மை—புறவம்மை |
| 242 | திருஆமாத்தூர் | சுவாமி—அழகுகாதலர்<br>அம்மை—அழகியநாயகி |
| 243 | திருஅண்ணாமலை | சுவாமி—அருணசலேச்வரர்<br>அம்மை—உண்ணாமுலைஅம்மை |

244 பதிகளிரு பத்திரண்டிற் கப்பால்நற் பாலி
நதிசேர் புகழ்த்தொண்டை நாட்டில்—கதியுதவும்

## தொண்டைநாட்டுத்தலம்—32.

245 காஞ்சிபுரத் தேகாம் பரனேநற் காமாட்சி
வாஞ்சையொடு கட்டும் வரதனே—ஆய்ந்துமறை
246 போற்றலுறுங் கச்சியப்பா பொங்குதிரு மேற்றளிசேர்
மேற்றளி நாயகனே மிக்கோர்முன்—தோற்றுமெழில்
247 ஓணகாந் தீச்சுரஞ்சேர் ஓணகாந் தீச்சுரனே
காணு மனேகதங் காவதத்துத்—தாணுவாம்

248 காவதனே கச்சிநெறிக் காரைக்காட் டேய்ந்துவரும்
தேவனே காரைத் திருநாதா—மேவும்
249 குரங்கணின்முட் டம்வாழும் கோவேவா லீசா
இரங்குமிறை யார்வளையா ளின்பா—வரஞ்சார்
250 திருமா கறற்புவன நாயகிதோள் சேர்ந்து
மருவடைக்க லங்காத்த வாழ்வே—திருவோத்தூர்ப்
251 போத இளமுலையாள் போற்றிடு நான்குபுய
நாதா திருவேத நாதனே—நீதிப்
252 பனங்காட்டூர் மேவும் பனங்காட்டு நாதா
வனங்காட் டமுதவல்லி மன்னு—கனங்காட்டும்
253 வல்லத்தில் வாழுமெங்கள் வல்லாம் பிகைபுணரும்
வல்லநா தாகருணை மன்னவா—நல்லதிரு
254 மாற்பேறு மேவுகின்ற மான்கருணை நாயகியாள்
ஏற்பான மால்வணங்கும் ஈசனே—வாய்ப்பாகும்
255 ஊறனகர் மன்னும் உமைபாகா மிக்காக
ஊறுங் கருணை உமாபதியே—தேறும்
256 இலம்பையங் கோட்டூர்க்கோ டேந்து முலையாள்
கலந்தசந்திர சேகரனே காமர்—துலங்குதிரு
257 விற்கோல மேவி விளங்கு புராந்தகிசேர்
பொற்கோல மேவும் புராந்தகா—மிக்கதிரு

244

## தொண்டைநாட்டுத்தலம்—32.

| | | |
|---|---|---|
| 245 | திருக்கச்சியேகம்பம் | சுவாமி—ஏகாம்பரநாதர் |
| | (காஞ்சீபுரம்) | அம்மை—காமாக்ஷியம்மை |
| 246 | திருமேற்றளி | சுவாமி—மேற்றளிநாயகர் |
| | (கச்சிமேற்றளி) | அம்மை—காமாக்ஷி அம்மை |
| 247 | திருவோணகாந்தன்தளி | சுவாமி—ஓணகாந்தீச்சுவரர் |
| | | அம்மை—காமாக்ஷி அம்மை |
| 247 | திருக்கச்சிஅநேகதங்காவதம் | சுவாமி—காவதநாதர் |
| | | அம்மை—காமாக்ஷியம்மை |
| 248 | திருக்கச்சிநெறிக்காரைக்காடு | சுவாமி—காரைத்திருநாதர் |
| | (திருக்காவீச்சுவரர்கோவில்) | அம்மை—காமாக்ஷியம்மை |
| 249 | திருக்குரங்கணின்முட்டம் | சுவாமி—வாலீச்சுவரர் |
| | | அம்மை—இறையார்வளையம்மை |
| 250 | திருமாகறல் | சுவாமி—அடைக்கலங்காத்தநாதர் |
| | | அம்மை—புவனநாயகியம்மை |
| 251 | திருவோத்தூர் | சுவாமி—வேதநாதர் |
| | | அம்மை—இளமுலைநாயகி |
| 252 | திருப்பனங்காட்டூர் | சுவாமி—பனங்காட்டுநாதர் |
| | (திருப்பனங்காடு) | அம்மை—அமிர்தவல்லி |
| 253 | திருவல்லம் | சுவாமி—வல்லம்நாதர் |
| | (திருவலம்) | அம்மை—வல்லாம்பிகை |
| 254 | திருமாற்பேறு | சுவாமி—மால்வணங்குமீசர் |
| | | அம்மை—கருணைநாயகி |
| 255 | திருவூறல் | சுவாமி—உமாபதி |
| | (தக்கோலம்) | அம்மை—உமாதேவி |
| 256 | திருவிலம்பையங்கோட்டூர் | சுவாமி—சந்திரசேகரர் |
| | | அம்மை—கோடேந்துமுலை |
| 257 | திருவிற்கோலம் | சுவாமி—திருபுராந்தகர் |
| | (கூவம்) | அம்மை—திருபுராந்தகி |

258 ஆலங்காட் டில்திகழ்வண் டார்குழலி போற்றநின்று
சாலநடிக் கும்மூர்த்த தாண்டவர்—ஞாலமகிழ்

259 பாசூரின் மேவும் பசுபதி நாயகிசேர்
பாசூர்நா தாசித் பராபரா—பேசுபுகழ்

260 வெண்பாக்க மாநகரில் மேவுகனி வாய்மொழிசேர்
பண்பாவெண் பாக்கப் பரமனே—நண்பான

261 கள்ளிற் பதிச்சிவா நந்தாகண் ஆநந்தத்
தெள்ளுமா னந்தவல்லி சேர்ப்புயனே—வில்லிரிய

262 ஞானப்பூங் கோதையுடன் நல்திருக்கா ளத்தியினில்
கானவன்கண் அப்புங்கா ளத்தியே—வானவர்கள்

263 போற்றுதிரு வொற்றியூர்ப் பூவை வடிவுடையாள்
தேற்றுமா நந்தத் தியாகனே—தோற்றும்

264 வலிதாய மேவும் வலிதாய நாதா
தலைபான தாயம்மை சார்பே—நிலையார்

265 திருமுல்லை வாயில் திகழ்பா சுபதே
சுரனே கொடியிடையாந் தோகை—வரனேசொல்

266 வேற்கா டெனுந்தலத்தில் வேற்கண்ணி பான்மருவும்
வேற்காட னேமயிலை மெய்ப்பதியில்—ஏற்காத

267 என்னைப்பெண் ஆக்கி எழில்கற் பகவல்லிக்கு
இன்புற் றுறைகபா லீச்சுரனே—துன்பகற்றும்

268 வான்மியூர் மேவும் வளர்சுந் தரமாதின்
பான்மே வியமருந்தே பால்வண்ணா—கான்மேவும்

269 கச்சூரா லக்கோவில் கன்னியுமை மாதினுளம்
மெச்சவிருந் திட்ட விமலனே—நச்சும்

270 இடைச்சுர மேவும் இடைச்சுரா வெற்பின்
மடக்கொடி சேரு மணாளா—விடைக்கொடிசூழ்

271 செய்யகழுக் குன்றில் திகழ்பெண்ணி னல்லாள்சேர்
மெய்யனே வேதகிரி வேதியா—பொய்யிலா

272 அச்சிறு பாக்கத்து அதிசுந் தரமின்னாள்
இச்சையுறும் பாக்கபு ரேசனே—கொச்சையிலா

273 வக்கரை தன்னில் வடிவாம் பிகைமருவு
சிற்கன மேவுசந்த்ர சேகரனே—சொற்கொள்

| | | |
|---|---|---|
| 258 | திருவாலங்காடு | சுவாமி—ஊர்த்வதாண்டவர் |
| | | அம்மை—வண்டார்குழலியம்மை |
| 259 | திருப்பாசூர் | சுவாமி—பாசூர்நாதர் |
| | | அம்மை—பசுபதிநாயகி |
| 260 | திருவெண்பாக்கம் (திருவிளம்பூர்) | சுவாமி—வெண்பாக்கநாதர் |
| | | அம்மை—கனிவாய்மொழியம்மை |
| 261 | திருக்கள்ளில் (திருக்கள்ளம்) | சுவாமி—சிவானந்தர் |
| | | அம்மை—ஆனந்தவல்லி |
| 262 | திருக்காளத்தி | சுவாமி—காளத்திநாதர் |
| | | அம்மை—ஞானப்பூங்கோதை |
| 263 | திருவொற்றியூர் | சுவாமி—ஆனந்தத்தியாகேசர் |
| | | அம்மை—வடிவுடைநாயகி |
| 264 | திருவலிதாயம் | சுவாமி—வலிதாயநாதர் |
| | | அம்மை—தாயம்மை |
| 265 | வடதிருமுல்லைவாயில் | சுவாமி—பாசுபதேச்சுவரர் |
| | | அம்மை—கொடியிடையம்மை |
| 266 | திருவேற்காடு | சுவாமி—வேற்காட்டீச்சுவரர் |
| | | அம்மை—வேற்கண்ணியம்மை |
| 267 | திருமயிலாப்பூர் | சுவாமி—கபாலீச்சுவரர் |
| | | அம்மை—கற்பகவல்லி |
| 268 | திருவான்மியூர் | சுவாமி—பால்வண்ணநாதர் |
| | | அம்மை—சுந்தரநாயகி |
| 269 | திருக்கச்சூர் ஆலக்கோவில் | சுவாமி—விருந்திட்டவரதர் |
| | | அம்மை—உமையம்மை |
| 270 | திருவிடைச்சுரம் | சுவாமி—இடைச்சுரநாதர் |
| | | அம்மை—இமயமடக்கொடி |
| 271 | திருக்கழுக்குன்றம் | சுவாமி—வேதகிரீச்சுவரர் |
| | | அம்மை—பெண்ணின்நல்லாள் |
| 272 | திருவச்சிறுபாக்கம் | சுவாமி—பாக்கபுரேச்சுவரர் |
| | | அம்மை—சுந்தரநாயகி |
| 273 | திருவக்கரை | சுவாமி—சந்திரசேகரர் |
| | | அம்மை—வடிவாம்பிகை |

274 அரசிலியி லப்பெரிய நாயகியோ டாரும்
அரசிலி நாத வரனே—உரமேவும்

275 காமர் இரும்பைமா காளக் குயில்மொழிசேர்
ஏம மலிமாகா ளேச்சுரா—நாமம்

276 பகரிப் பதிகள்முப் பானிரண்டுக் கப்பால்
திகழ்துளுவ நாட்டில் சிறந்து—புகழ்கொண்ட

## துளுவநாட்டுத்தலம்—1.

277 கோகரண மேவுதிருக் கோகரண நாயகியாள்
பாகமுறு மாபலப ராபரா—வாகுறவே

278 திண்பார் புகழ்காளத் திக்கப்பால் உத்தரத்தில்
நண்பால் மருவி நணுகலுறும்—பண்பாம்

## வடநாட்டுத்தலம்--5.

279 திருப்பருப்ப தஞ்சேர் திருப்பருப்ப தேசா
பருப்பத மங்கை பதியே—விருப்பமுற

280 நீலப் பருப்பதஞ்சேர் நீலாம் பிகைமகிழும்
நீலா சலநாத நித்தனே—மேலாகும்

281 மாவனேக தங்கா வதத்தின் மனோன்மணிசேர்
தூவனேக தங்கா வதேச்சுரனே—மேவும்

282 திருக்கேதா ரக்கவுரி சேருங்கே தாரா
இருக்குமுதல் நான்மறையும் ஏத்த—உருக்கமுடன்

283 பூதகண நாதர் புடைசூழ வானவரும்
மாதவரும் போற்றி வரங்கேட்பப்—போதுகந்த

284 பைங்கோதை வேற்கண் பசியநிறப் பார்வதித்தாய்
அங்கோர் புறத்தின் அமர்ந்திருப்ப—மங்காத

285 மாகயிலை யாகுநொடித் தான்மலையி லென்றென்றும்
தாகமதா வீற்றிருக்குஞ் சம்புவே—போகசுகம்

| | | |
|---|---|---|
| 274 | திருவாசிலி | சுவாமி—அரசிலிநாதர் |
| | | அம்மை—பெரியநாயகி |
| 275 | திருஇரும்பைமாகாளம் | சுவாமி—மாகாளேச்சுவரர் |
| | | அம்மை—குயில்மொழிநாயகி |
| 276 | | |

## துளுவநாட்டுத்தலம்—1.

| | | |
|---|---|---|
| 277 | திருக்கோகரணம் | சுவாமி—மகாபலேச்சுவரர் |
| | | அம்மை—கோகரணநாயகி |
| 278 | | |

## வடநாட்டுத்தலம்—5.

| | | |
|---|---|---|
| 279 | திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்-மல்லிகார்ச்சுனம்) | சுவாமி—பருப்பதநாதர் |
| | | அம்மை—பருப்பதநாயகி |
| 280 | திருஇந்திரநீலப்பருப்பதம் | சுவாமி—நீலாசலநாதர் |
| | | அம்மை—நீலாம்பிகை |
| 281 | திருஅநேகதங்காவதம் | சுவாமி—அநேகதங்காவதநாதர் |
| | | அம்மை—மனோன்மணியம்மை |
| 282 | திருக்கேதாரம் | சுவாமி—கேதாரநாதர் |
| | | அம்மை—கேதாரகௌரியம்மை |
| 283 | | |
| 284 | | |
| 285 | திருநொடித்தான்மலை (ஸ்ரீ கைலாசம்) | சுவாமி—பரமசிவன் |
| | | அம்மை—பார்வதியம்மை |

286 மாறிலா வள்ளியொடு மால்யானை மங்கையொடும்
ஆறு தலத்தும் அருள்பெருக—மீறுமெழில்

287 குன்றுதோறும் ஆடும் குமரவேளைப்பயந்த
கன்றுமா னேந்தும் கராம்புயனே—வென்றிமிகு

288 ஞானசம் பந்தர் திரு நாவரையர் வன்றொண்டர்
பால்நிகரும் தேவாரப் பாமாலை—மாநிலத்தில்

289 பாங்குடனே சாத்தும் பதிகளிரு நூற்றெழுபான்
நான்கன்றிக் காசிமுதல் நற்பதிக்கு—ஆங்குவைத்துப்

290 பாடு மிடங்களினும் பண்புடைய வாதவூர்ப்
பீடுபெறு நாதன் பிறங்கருளால்—சூடுகின்ற

291 மாணிக்கம் போன்றதிரு வாசகத்தில் நல்லிசைப்பா
பூணும் தலங்களினும் பொற்புடனே—நீள்நிலத்தில்

292 பேணுகின்ற எண்ணில் பெரும்பதிகள் தோறுமலை
வாணுதலா ளோடு மகிழ்ந்திருக்கும்—தாணுவே

293 சச்சிதா னந்த சதாசிவனே அன்பர்நெஞ்சில்
வைத்திருக்கு நன்னமச்சி வாயனே—மெச்சும்

294 அகள சகள அகண்டிதமே இன்பம்
திகழ்தத் பரமே சிவமே—நிகழ்வுறுபேர்

295 அன்புடனே உன்தன் அநந்தநா மத்தைமிகும்
துன்பகலப் போற்றித் துதிப்பவருக்கு—இன்ப

296 நிதியே பரமசிவ நித்தியா னந்த
பதியே பசுபதியே பண்பார்—கதியுதவும்

297 ஆனந்த சோதியே ஆதாரவாய் நம்புமவர்க்கு
ஆனந்த மாக்குவிக்கும் ஐயனே—ஆனந்த

298 போக சிவானந்தப் பொற்பாதம் என்னெஞ்சில்
யோகமுறச் செய்வாய் உமைபாகா—வாகைபெறு

299 நின்னன் பருக்கு நிகழுமெண் சித்தியொடு
பன்னலமும் மெய்யன்பும் பாக்கியமும்—மன்னவென்று

300 நந்தா தொளிர்நித்யா னந்த சுகவாழ்வும்
தந்தருளுன் தாளே சரண்.

சிவக்ஷேத்திர சிவநாமக் கலிவெண்பா
முற்றுப்பெற்றது.

286 to 300 வள்ளியம்மை, தெய்வயானையொடு திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதொறாடல், பழமுதிர்சோலை முதலிய தலங்கள் தோறும் மேவி அருள் புரியும்படி குமரவேளைப் பயந்த கராம்புயனே! வெற்றி மிகுந்த ஞானசம்பந்தர், திருநாவுக்கரையர், சுந்தரர், முதலிய மூவராலும் பாடப்பட்ட தலங்கள் இருநூற்று எழுபத்து நான்கிலும் நன்கு வீற்றிருந்தருளும் ஸ்தாணுவே! வாதவூரடிகளால் திருவாசகத்தில் பாடப்பட்டு மூவரால் பாடப்படாதனவாகிய மகேந்திரமலை, கல்லாடம், பஞ்சப்பள்ளி, நந்தம்பாடி, வேலம்புத்தூர், காந்தம்புத்தூர், உத்தரகோசமங்கை (சுவாமி-கோசமங்கைநாதர்—அம்மை-கோசமங்கை), வாதவூர், திருப்பெருந்துறை (சுவாமி-ஆத்மநாதர்—அம்மை-உமாதேவி), பூவலம், பட்டமங்கை, ஓரியூர், பாண்டூர், சந்திரதீபம் முதலிய ஸ்தலங்களிலும், வாணுதலாளொடும் கோவில்கொண்டருளும் பெம்மானே! அன்பர் நெஞ்சில் வீற்றிருக்கும் நமச்சிவாய! இன்பம்திகழ் தற்பரமே! மிக்க அன்புடன் நின்தன் அனந்த நாமத்தைத் தியானிப்பாரது துன்பத்தை நீக்கி இன்பந்தரும் தயாநிதியே! பரமனே! சிவனே! நித்யானந்தபதியே! பசுபதியே-பண்புமிக்ககதி உதவும் ஆனந்தசோதியே! நம்புவார்க்கு ஆனந்தமளிக்கும் ஐயனே! ஆனந்த போக சிவானந்த பொற்பாதம் என்னெஞ்சில் உறச்செய்வாய். உமைகாந்தா! நின் அன்பருக்குப் பன்னலமும், மெய்யன்பும், பாக்கியமும் பெருகவேண்டி, நந்தாது ஒளிரும் நித்யானந்த சுகவாழ்வைத் தரும் நின் தாள்களே எனக்குச் சரண்.

வாழி நான்மறை வாழிய சைவநூல்
வாழி மன்னவர் வான்பெருங் கோனெறி
வாழி நீண்முகில் வைபகம் யாவையும்
வாழி வாழி வளஞ்சிறந் தென்றுமே.

சிவநாமக் கலிவெண்பா முற்றிற்று.